பக்கங்கள்:11 | விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 05 வியாழக்கிழமை 19.05.2022 கதிர் 195

**இது ரகசியம் அல்ல!**

கடந்த 9,10ஆம் திகதிகளில் நாட்டில் நடந்த வன்முறை கிளர்ச்சியை அடுத்து பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் வெளியே தலைகாட்டாமல் பதுங்கிக் கொண்டனர்; பம்மிக் கொண்டனர். அது நீண்ட காதை. அதை விட்டு விடுவோம்.

☞2

# தாக்குதலை வேண்டும் என்றே பொலிஸ் தடுக்கவில்லையாம்!



## நாடாளுமன்றத்தில் உண்மையைப் போட்டுடைத்தார் ஆளும் கட்சியின் முக்கியஸ்தரான ரமேஷ் பத்திரண


கொழும்பு, மே 19

கடந்த 9ஆம் திகதி காலிமுகத்திடல் மற்றும் அலரி மாளிகைக்கு முன்பாக அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் மீது சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் நடத்திய தாக்குதல்களை பொலிஸ்மா அதிபர் மற்றும் பொதுப்பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோர் வேண்டுமென்றே நிறுத்துவதற்குத் தவறிவிட்டனர் என ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஷ் பத்திரண குற்றம் சாட்டியுள்ளார்.

☞2

## முள்ளிவாய்க்காலில் இறந்தோருக்கு காலிமுகத்திடலில் நேற்றிரவு பேரணி





முள்ளிவாய்க்கால் படுகொலையின் 13ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் கொழும்பு - காலிமுகத்திடலில் நேற்று காலையும் மாலையும் நடைபெற்றன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பதவி விலகக் கோரி அறவழிப்

☞2

## நாடாளுமன்றிலும் நேற்று கூட்டமைப்பினர் அஞ்சலி

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினமான நேற்று, இறுதிப்போரில் கொல்லப்பட்டவர்களுக்காக நாடாளுமன்றத்தில் ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற

☞2

## மின்வெட்டு குறையும்!

தற்போது அமுலாக்கப்படும் மின் தடை நேரத்தை குறைக்க முடியும் என மின்சார சபையின் சிரேஷ்ட பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மழையுடனான காலநிலையால், நீர்மின் உற்பத்தி நிலையங்களை

☞2

## கைதான இரு எம்.பிமாரும் 25 வரை விளக்கமறியலில்!

கடந்த 9ஆம் திகதி காலிமுகத்திடல் மற்றும் அலரிமாளிகைக்கு முன்பாக அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் மீது தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பில் நேற்று முன்தினம் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது

☞2

## கண்ணீரால் நனைந்தது முள்ளிவாய்க்கால் முற்றம்

### உயிரிழந்த உறவுகளுக்கு சுடரேற்றி அஞ்சலி தமிழர் தேசம் எங்கும் மக்கள் உணர்வெழுச்சி





(எஸ்.தவசீலன்)

கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதிக் கட்ட யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் லட்சத்திற்கும் அதிகமான

☞2

## யாழ்.பல்கலையிலும் நேற்று நினைவேந்தல்




யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நேற்றைய தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் உள்ள

☞2

## நேற்று முள்ளிவாய்க்கால் தினத்தில் சந்திரிகாவும் விளக்கேற்றி அஞ்சலி



கொழும்பு, மே 19

முப்பது வருடகால இனப்படுகொலைப் போரில் நாம் ஏராளமானவற்றை இழந்துள்ளோம் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இறுதிப் போர் நடைபெற்று 13 வருடங்கள் கடந்துள்ள நிலையில் நேற்று தமிழர் தேசமெங்கும் முள்ளிவாய்க்கால் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிலையில் போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து தனது இல்லத்தில் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தியுள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா இது தொடர்பில் தனது முகநூல் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

'ஒரு நாட்டையோ மனித இனத்தையோ போரினால் தோற்கடிக்க முடியாது.

☞2

## விமானத்தில் இந்தியா சென்ற அறுவர் புகலிடக் கோரிக்கை



இலங்கையில் இருந்து கடந்த ஜனவரி மாதம் நுழைவு விசா பெற்று விமானம் மூலம் இந்தியா பயணித்த ஆறு பேர் நேற்று புதன்கிழமை அங்கு அகதிக் கோரிக்கையை சமர்ப்பித்துள்ளனர் எனத் தெரிய வருகிறது.

இலங்கையில்

☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அதையடுத்து ரணில் பிரதமரானார். அப்போது அவரது அரசில் அமைச்சரவைக்கு பலத்த வெற்றிடங்கள் இருந்தன. நாட்டின் கலவரத்தால் ஆளை விட்டால் போதுமென்று ஓடி ஒளியும் நிலையில் தான் பல எம்.பிக்களும் இருந்தனர். அதனால் ஆரம்பத்தில் அமைச்சர் பதவிகளுக்கு அதிக கேள்வி இருக்கவில்லை. ஜனாதிபதி, பிரதமர் உட்பட 20 பேர் அமைச்சரவைக்கு ஆள் பிடிப்பதே முயல் கொம்பைத் தேடுவதாக இருந்தது.

இருக்கும் களநிலையில் நமக்கேன் வீண் வம்பு, ஒதுங்கி இருந்து தப்பிக் கொள்வோம் என்ற கருத்தில் பல தரப்புகளும், கட்சிகளும் ரணிலின் அரசுக்கு வெளியிலிருந்து ஆதரவு, நாங்கள் அமைச்சர் பதவிகளைக் கோர மாட்டோம் என்றெல்லாம் ஆரம்பத்தில் பீலா விட்டன.

ஆனால் நேற்றும் நேற்று முன்தினமும் எதுவித விக்கினமும் இன்றி நாடாளுமன்ற அமர்வுகள் சுமுகமாக நடந்தேறி விட்டன அல்லவா? தலைமறைவு என்று கூறிய மஹிந்த ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ போன்றோரே நாடாளுமன்றுக்கு வந்துவிட்டனர், நாடாளுமன்றச் சுற்றுவட்டத்தில் கூட ஆர்ப்பாட்டங்கள், குழப்பங்கள் நடக்கவில்லை, எனவே எல்லாம் சுமூக நிலைக்கு வந்துவிட்டது போன்ற பிரமை; கருத்துநிலை.

அவ்வளவுதான். மீண்டும் அமைச்சர் பதவிகளுக்கு மவுசு கூடிவிட்டது. வெளியிலிருந்து அரசுக்கு ஆதரவு என்றவர்கள்,'பழைய குருடி கதவை திறடி' என்ற கதையாக அமைச்சரவைப் பதவிக்கு யாசகம் தொடங்கிவிட்டார்கள். அமைச்சர் பதவிக்குக் கேள்வி உயர்ந்துவிட்டது.

முதலில் ஜனாதிபதி, பிரதமருடன் சேர்ந்து 20 பேர் கொண்ட அமைச்சரவை தான், இராஜாங்க அமைச்சர்கள, பிரதியமைச்சர்கள் பதவி இல்லை, அவற்றால் வீண் விரயம் என்றெல்லாம் பேசப்பட்டது.

இப்போது பலமுனைக் கோரிக்கைகளைச் சமாளிப்பதற்காக இராஜாங்க அமைச்சுப் பதவிகளும் கொடுக்க வேண்டுமென்ற இக்கட்டு ஜனாதிபதிக்கு வந்துவிட்டது. ரணில் அரசு தப்பிப் பிழைத்து நீடிக்கும் என்பது போன்ற தோற்றப்பாடு தெரிவதால் அமைச்சர் பதவிக்கு முண்டியடிப்போர் கணக்கும் எகிறி விட்டது.

இதற்கிடையில் அமைச்சரவை எதிர்பார்ப்புகள் தொடர்பாக செய்தியாளர்கள் தந்த தகவல்கள் இவை:-

சுதந்திரக்கட்சியின் ஐவர் ஜனாதிபதி கோடாபய ராஜபக்ஷவைச் சந்தித்துள்ளனர். அமைச்சுப் பதவிகளை கோரினர் என்று கூறப்படுகின்றது.

அவர்களுக்கு இரு அமைச்சர் பதவிகள், இரு பிரதியமைச்சர் பதவிகள் மட்டும் வழங்கலாம் என ஜனாதிபதி தரப்பில் அறிவிப்பட்டுள்ளது.

அமைச்சு பதவிகளைப் பெறுவதில் மஹிந்த அமரவீர , துமிந்த திஸநாயக்கா இடையே போட்டி நிலவுகிறது. ரஞ்சித் சியம்பலாபிட்டிய, கட்சிச் செயலாளர் தயாசிறியும் அமைச்சுப் பதவிகளை கோரினர் என்று தெரிவிக்கப்பட்டது. மேலும், நிமால் சிறிபால டி சில்வா, லஸந்த அழகியவண்ண போன்றோரும் கட்சிக்குள் அமைச்சர் பதவிகளை எதிர்பார்த்திருக்கின்றனர்.

ஆனால், கட்சிக்கு இரண்டு அமைச்சர் பதவிகள்தான் என்பதால் அவற்றை எப்படிப் பகிர்வது என்று தெரியாமல் சிண்டையைப் பிய்த்துக் கொண்டிருக்கின்றார் ஜனாதிபதி.

சுரேன் ராகவன் , சாந்த பண்டாரவுக்கு எந்த பதவிகளையும் வழங்கக் கூடாதென்று ரணிலிடம் கேட்டாராம் சு.க. தலைவர் மைத்தரி.

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து சம்பிக்க, ஹரீன் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார, வடிவேல் சுரேஷ் ஆகியோர் தங்கள் பக்கம் வரவிருக்கின்றனர் என நெருக்கமானவர்களிடம் சொன்னார் பிரதமர் ரணில்.

எம்.எம் .முஷாரப், ஹாரீஸ் நசீர் , அரவிந்த குமார், அலிசப்ரி றஹீம் ஆகியோருக்கும் பதவிகளை வழங்க ரணில் ஆராய்ந்து வருகின்றார் என்று கூறப்பட்டது.

– மின்னல் –

## தாக்குதலை வேண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஷ் பத்திரண காலிமுகத்திடல் தாக்குதல்கள் தொடர்பில் நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே பொலிஸ்மா அதிபரையும் பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரையும் கடுமையாக விமர்சித்தார்.

அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்கள் ஒரு மாதத்திற்கும் மேலாக இடம் பெற்று வருகின்றன. அதனைத் தாக்குவதற்கோ அல்லது சீர்குலைப்பதற்கோ ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் எந்தக் காரணங்களும் இல்லை.

எனினும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பின் போது ஒரு சில அரசியல்வாதிகள் கட்சி விசுவாசிகளுக்குத் தவறான நோக்கத்துடன் உருவேற்றிச் செல்வாக்குச் செலுத்தியதைக் காண முடிந்தது. இதன் விளைவாகவே காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கப்பட்டனர்.

இந்தத் தாக்குதல்களுக்கு முன்னர் மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு அறிவித்து தாக்குதலைத் தடுக்குமாறு வலியுறுத்தியிருந்தேன்.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதிக்குத் தெரிவிக்கப்பட்டு, இது தொடர்பாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தென்னக்கோனிடம் வினவியபோது, 'போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டாம் என பொலிஸ்மா அதிபரினால் தனக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது' என அவர் தெரிவித்தார்.

பின்னர் ஜனாதிபதியின் நேரடித் தலையீட்டையடுத்தே காலிமுகத்திடலில் தாக்குதல் நடாத்தியவர்களைக் கலைப்பதற்கு கண்ணீர்ப் புகைக்குண்டு மற்றும் நீர்த்தாரைகளைப் பிரயோகிப்பதற்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை எடுத்தார்.

எனவே பொலிஸ்மா அதிபர் மற்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோர் வேண்டுமென்றே செயற்படாததன் காரணமாகவே இந்தத் தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்பதை சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அறிக்கை நிரூபித்துள்ளது. – எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஷ் பத்திரண நேற்று நாடாளுமன்றத்தில் மேலும் தெரிவித்திருந்தார்.

## நேற்று முள்ளிவாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அது வெற்றி அல்ல. முப்பது வருட இனப் படுகொலைப் போரில் நாம் இழந்தவை ஏராளம். வடக்கிலும் தெற்கிலும் உள்ள தாய்மார்கள் பிள்ளைகளை இழந்துள்ளனர். பிள்ளைகள் பெற்றோரை இழந்துள்ளனர். நாங்கள் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் எனப் பிரிந்துள்ளோம்.

ஞஅந்தப் போரினால் நான் ஒரு கண்ணை இழந்தேன். இன்னும் பல இழப்புக்களைச் சந்திக்க வேண்டியிருந்தது.

'போரின் முடிவைக் கொண்டாடும் இந்த நேரத்தில் வெறுப்புக்குப் பதிலாக அன்பைக் காட்டுவோம். பழிவாங்குவதற்குப் பதிலாக மன்னிப்போம். பிரிந்து செல்வதற்குப் பதிலாக ஒன்றாக சுகமாக இருப்போம்.

'நம் இதயத்தில் உள்ள பிசாசுக்குப் பதிலாக கடவுளை எழுப்புவோம். உறுதியும் அமைதியும் நிறைந்த நாளாக இன்றைய நாளை உருவாக்குவோம். உலகிற்குக் கொஞ்சம் அன்பைக் காட்டுவோம். சகோதரத்துவத்தில் நிற்போம். இருள் சூழ்ந்திருந்த நம் நாட்டை சகவாழ்வுவோடு விளக்கு ஏற்றி ஒளியேற்றுவோம்.'

– என அவர் தனது முகநூல் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

## நாடாளுமன்றிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

உறுப்பினர்களே இவ்வாறு அஞ்சலி செலுத்தினர்.

நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது,

நாட்டில் கடந்த 9 ஆம் திகதி இடம் பெற்ற சம்பவங்கள் தொடர்பிலேயே இரண்டாவது நாளாகவும் விவாதம் தொடர்ந்தது.

இவ்விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம் –

படுகொலை செய்யப்பட்ட எமது மக்களை நினைவுகூருவதற்காக முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் நடக்கின்றது. எமது மக்களுக்காக ஒரு நிமிடம் அஞ்சலி செலுத்த அனுமதி வழங்க வேண்டும். – எனக் குறிப்பிட்டார்.

இதனையடுத்து செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரன் ஆகியோர் எழுந்து நின்று ஒரு நிமிடம் அஞ்சலி செலுத்தினர்.

இதற்கு மொட்டு கட்சி உறுப்பினர் ஒருவர் கடும் எதிர்ப்பை வெளியிட்டார். முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட பயங்கரவாதிகளை நினைவுகூருகின்றனர் என சபாபீடத்தில் முறையிட்டார்.

அப்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினரான பிரேமநாத் தொலவத்தவே சபைக்கு தலைமை தாங்கினார். இச்சம்பவம் தொடர்பில் சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டு வரப்படும் என அவர் குறிப்பிட்டார்.

## கண்ணீரால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மக்கள் ஒரு குறுகிய நிலப்பரப்பில் முடங்கி இருந்த சமயத்தில் அவர்களில் பல்லாயிரக்கணக்கானோர் கொன்றொழிக்கப்பட்ட தமிழின படுகொலையின் – பேரவலத்தின் – 13 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று முள்ளிவாய்க்கால் நினைவுமுற்றத்தில் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றன.

அதேபோன்று தமிழர் தாயகம் எங்கும் மற்றும் புலம்பெயர் தேசம் எங்கும் இந்நாள் பெரும் உணர்வுபூர்வமாக அமைதியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

வடக்கு – கிழக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்காலில் இடம் பெற்ற நிகழ்வில் இறுதி யுத்தத்தில் தனது ஒரு கையை இழந்து பாதிக்கப்பட்ட ஒருவர் பொதுச்சுடர் ஏற்றியமையைத் தொடர்ந்து ஏனைய மக்கள் தமது உறவுகளுக்கான சுடரேற்றி, அகவணக்கம் செலுத்தி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை முள்ளிவாய்க்கால் பிரகடனமும் வெளியிடப்பட்டது.

கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதிக் கட்ட யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்று கூடிய காலகட்டத்தில் மக்கள் பாரிய உணவுநெருக்கடிக்குமுகம்கொடுத்த வேளையிலே, அந்த மக்கள் உணவுத் தேவைக்காக பல்வேறு இன்னல்களை சந்தித்து வந்த நிலையில், முள்ளிவாய்க்காலில் அவர்களது பசி போக்கிய முள்ளிவாய்க்கால் கஞ்சியும் பல்வேறு தரப்பினராலும் நேற்றும் வழங்கப்பட்டது.

## கைதான இரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சரும் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சனத் நிஷாந்த மற்றும் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் மிலான் ஜெயதிலக ஆகியோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இவர்கள் இருவரும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது இருவரையும் எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இதேவேளை இந்தத் தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என கைது செய்யப்பட்ட முன்னாள் மாகாண சபை உறுப்பினர் அமல் சில்வா மற்றும் மொரட்டுவ மாநகர சபை ஊழியர் ஒருவர் என்போரும் எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## முள்ளிவாய்க்காலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

போராட்டம் முன்னெடுக்கப்பட்டுவரும் 'கோட்டா கோ கம'வில் நேற்றுக் காலை நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வின் இறுதியில் 'முள்ளிவாய்க்கால் கஞ்சி'யும் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து காலிமுகத்திடலில் நேற்று மாலை, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் உரிமையை வலியுறுத்தும் வகையில் மெழுகுவர்த்தி ஏற்றல் நிகழ்வு நடைபெற்றது. Galle Face Hotel முன்பாக இந்த நிகழ்வு இடம்பெற் றது.

இதில் கலந்துகொண்டவர்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பதாதையுடன் இறந்தவர்களுக்கு நீதி கோரி பேரணியை ஆரம்பித்தனர்.

இந்தப் பேரணி காலிமுகத்திடல் போராட்டத்தின் மத்திய இடமான ஜனாதிபதி செயலகத்தின் முன்பாக நிறைவு பெற்றது.

## யாழ்.பல்கலையிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி முன்பாக மதியம் 2 மணியளவில் மாணவர்கள் மற்றும் ஊழியர்களால் நினைவுகூரல் நிகழ்வு இடம்பெற்றது.

முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு, முள்ளிவாய்க்காலில் உறவுகளை இழந்த மாணவனால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டது.

அதனை தொடர்ந்து மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்களால் சுடரேற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

## மின்வெட்டு குறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அண்டியுள்ள நீர்த்தேக்கங்களில், நீர் மட்டம் குறிப்பிடத்தக்க அளவு உயர்வடைந்துள்ளமையே இதற்குக் காரணமாகும் என அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இப்பகுதிகளில் உள்ள நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம், தற்போது 50 சதவீதமளவில் உயர்வடைந்துள்ளதாக மின்சார சபையின் சிரேஷ்ட பொறியியலாளர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நந்திக பத்திரண தெரிவித்துள்ளார்.

## விமானத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தற்போது நிலவும் கடும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி நிலைமை உடனடியாகத் தீரும் சாத்தியக் கூறுகள் இல்லை என்பதன் அடிப்படையில் தம்மை அகதிகளாக ஏற்றுக்கொள்ளுமாறு இந்தக் கோரிக்கைய. அவர்கள் சமர்ப்பித்துள்ளனர்.

இலங்கையின் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த அறுவரே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## விடுதலைத் தீர்ப்பு

ராஜீவ் கொலை வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட பேரறிவாளனுக்கு 32 ஆண்டுகளுக்குப் பின்னர் விடுதலை கிடைத்திருக்கின்றது.

இந்தத் தீர்ப்பின் அடிப்படையில், இதே வழக்கிற்காகக் குற்றவாளிகளாகக் காணப்பட்டு சிறையில் இருக்கும் ஏனைய அறுவருக்கும் கூட விடுதலைக்கு வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இப்போது வழங்கப்பட்ட தீர்ப்பின் முழு சட்ட விவரங்களும், கைக்குக் கிடைக்கவில்லை. அவை கிடைத்தும், அவற்றின் அடிப்படையில் அந்த அறுவரின் விடுதலைக்கும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும் எனத் தமிழக மாநில முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியிருக்கின்றார்.

அது மாத்திரமல்ல, மனித நேய மற்றும் மனித உரிமைகள் அடிப்படையில் இந்த எழுவரையும் விடுவிக்க நடவடிக்கை எடுப்போம் என எமது தி.மு.க. தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருந்தோம். அதைச் செய்வோம் என்று அவர் திரும்பவும் உறுதியளித்திருக்கின்றார்.

இந்தத் தீர்ப்பை ஒட்டி இரண்டு விடயங்கள் கவனிக்கப்பட வேண்டும்.

பேரறிவாளனின் விடுதலைக்காகத் தளராப் போராட்டம் நடத்திய அவரின் தயார் அற்புதம்மாவை தமிழர்கள் போற்றுகின்றமை முதலாவது விடயம். உண்மையில் அற்புதம்படைத்த அம்மாவாகவே அவர் நோக்கப்படுகின்றார்.

"தன்னுடைய மகனுக்கு இழைக்கப்பட்டிருக்கின்ற அநீதியைக் களைந்திட எந்த எல்லை வரை செல்ல முடியுமோ அந்த எல்லை வரைச் சென்று போராடத் தயங்காத அற்புதம்மாள் தாய்மையின் இலக்கணமாக விளங்கிக் கொண்டிருக்கின்றார். அவருக்கும் என்னுடைய வாழ்த்துகள்" – என்று தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்திருக்கின்றார். அது போன்ற கருத்துகள் சமூக ஊடகங்களில் பரவலாக வெளிவருகின்றன.

அடுத்த விடயம் – இந்த விடுதலைத் தீர்ப்புப் பற்றியது. இந்தத் தீர்ப்பு மூலம் மாநில அரசின் சுயாட்சி அதிகாரம் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக தமிழக முதல்வர் ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்திருக்கின்றார். அது அந்த நாட்டு அரசியல், எமக்கு விடயமல்ல.

ராஜீவ் படுகொலைச் சம்பவத்தில் பேரறிவாளன் வேண்டுமென்றே பின்னர் கோர்த்து விடப்பட்டார், அதில் அவர் உண்மையில் சம்பந்தப்படவில்லை என்று இந்தப் படுகொலைச் சம்பவத்தின் முக்கிய புலன்விசாரணையாளர் ஒருவர் பரபரப்புத் தகவல் வெளியிட்ட போதும், அதன் மூலம் ஏற்கனவே பேரறிவாளனுக்கு இழைக்கப்பட்ட அநீதி திருத்தப்பட வாய்ப்பு ஏற்படவில்லை.

எது, எப்படி என்றாலும் பேரறிவாளனும் அவருடன் சேர்ந்த மற்ற அறுவரும் கூட விரைவில் விடுதலை செய்யப்பட்டாலும், அதன் அர்த்தம் இவர்கள் இந்தப் படுகொலை விவகாரத்தில் குற்றமே புரியாதவர்களாக அங்கீகரிக்கப்பட்டு விட்டனர் என்பதல்ல. அதுதான் யதார்த்தம்.

இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பாக புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம் அது நடந்து பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு பேட்டியளித்தார். "ராஜீவ் காந்தி கொலை ஒரு வரலாற்றுத் துன்பியல் நிகழ்வு. அதை ஒரு தனிச் சம்பவமாக நோக்காமல், அந்த வரலாற்றுக் கால கட்டத்தில் நிகழ்ந்த பல்வேறு தொடர் சம்பவங்களுடன் சேர்த்துப் பாருங்கள். அதற்காக ஈழத் தமிழர்களை ஒதுக்கி விடாதீர்கள். அவர்களின் வரலாற்றுப் பேரவல நிலையைக் கவனத்தில் கொள்ளுங்கள்." – என்பதுதான் அவரது கோரிக்கையாக இருந்தது.

இன்றும், ஒரு புறம் பேரறிவாளன் விடுதலை என்ற மகிழ்ச்சி இருந்தாலும், மறுபுறம் ராஜீவ் காந்தி என்ற தங்கள் தலைவரை இழந்த மக்களின் வேதனை தொடர்பில் ஒரு கழிவிரக்கமும் எல்லோர் மனதிலும் ஓடும். ஓட வேண்டும்

மதியுரைஞர் பாலசிங்கத்தின் அதே கோரிக்கையை ஏனைய தமிழர்களிடமும் இந்திய மக்களிடமும் இந்தச் சமயத்திலும் முன்வைக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள் ஈழத் தமிழர்கள்.

## யாழ்ப்பாணத்தில் வீட்டில் தீ பரவல் சமையற்கூரை எரிந்து சாம்பலாகியது!



(ந.லோகதயாளன்)

யாழில் சமையலில் ஈடுபட்ட நேரம் வீட்டின் கூரையின் மீது தீ பரவியதால் சமையல் கூடம் எரிந்து நாசமாகியது.

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியிலேயே நேற்று (புதன்கிழமை) காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது

உணவு தயாரிப்பிற்காக விறகு மூலம் மூட்டிய தீ அதிகமாக பரவிய சமயமே இந்த அனர்த்தம் ஏற்பட்டது. இதனையடுத்து யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீ அணைப்பு பிரிவிற்கு தகவல் வழங்கப்பட்டது.

சம்பவத்தையறிந்த தீ அணைப்பு பிரிவினர் உடன் விரைந்து தீயை அணைத்தமையால் பாரிய அனர்த்தம் தவிர்க்கப்பட்டது.

## தனது வீடு எரிக்கப்பட்டமைக்கு விசனம் தெரிவித்தார் பந்துல!

நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தனது வீடு எரிக்கப்பட்டமை தொடர்பாக நாடளுமன்றத்தில் மிகவும் உணர்ச்சிகரமான உரையை நிகழ்த்தினார்.

நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற அமர்வில் உரையாற்றிய அவர் –

'என் வீடு தீப்பற்றி எரிந்தது. இந்த நாட்டுக்கு எதிராக நான் என்ன குற்றம் செய்தேன் என்று நான் ஆச்சரியப்படுகிறேன். என் தொண்டையில் இரத்தம் வரும் வரை 3 லட்சம் பேருக்கு மேல் எனது அறிவுத்திறனைப் பகிர்ந்துகொண்டேன்.

நான் அமைச்சர்கள் உத்தியோகபூர்வ இல்லத்தில் வசித்ததில்லை. நான் உருவாக்கிய வீட்டிலேயே எப்போதும் இருக்கிறேன். ஒரு நாளிதழை ஆசியாவிலேயே சிறந்த படமாக உருவாக்கியதற்காக டொலர் பரிசு பெற்றேன். நாட்டுக்குப் பெருமை சேர்த்துள்ளேன்.

மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் கல்வியில் மாற்றம் செய்யப்பட்டு, தொழில்நுட்பம் புகுத்தப்பட்டு, தகவல் தொழில்நுட்பம், பொறியியல் தொழில்நுட்பம், உயிரியல் தொழில்நுட்பம் போன்ற பாடங்கள் எதிர்கால சந்ததியினருக்காக உருவாக்கப்பட்டன.

எங்களிடம் உள்ளதை தனிப்பட்ட முறையில் நன்கொடையாக அளித்தோம். பல ஆண்டுகளாக வருமான வரி செலுத்தி வருகிறோம். ரசீதுகளை சமர்ப்பிக்கலாம். நாட்டுக்கு கடன் இல்லாத வரி செலுத்துபவர்களாக நாட்டுக்கு எதையாவது சேர்க்க முயல்பவர்கள் நாங்கள்.



சுமார் 51 புத்தகங்கள் எழுதியுள்ளேன். எனது வீட்டில் மதிப்புமிக்க நூலகம் உள்ளது. நூலகத்துக்கு தீ வைக்காதமைக்கு எனது மரியாதையும் நன்றியும். ஏனென்றால் நான் அதை பல்கலைக்கழகத்துக்கு நன்கொடையாக வழங்குகிறேன்.

அதனால்தான் அந்த புத்தகங்களை எங்கள் எதிர்கால சந்ததியினர் பயன்படுத்துவதற்காக சேமிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளுக்கு மட்டக்களப்பில் பொலிஸ் இடையூறு!

### சாணக்கியன் ரணிலிடம் முறையீடு

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் மட்டக்களப்பில் நடைபெற்று வருகின்ற நிலையில், அதனை தடுக்கும் பணிகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் நேற்று (புதன்கிழமை) நாடாளுமன்றில் முறையிட்டார்.

இது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலையீடு செய்யவேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார்.

முள்ளிவாய்க்கால் நிகழ்வுகள் நேற்று காலிமுகத்திடலிலும் இடம்பெற்ற நிலையில் மட்டக்களப்பில் அதற்கு பொலிஸாரால் இடையூறு விளைவிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார். ஏற்கனவே அமைதியான நினைவேந்தல்களுக்கு இடமுள்ளதாக ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ள நிலையில் இது இடம்பெறுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

## ஒரு மூடை கோதுமை மாவின் விலை 12,500 ரூபாவாக எகிறியது!

### வெதுப்பக உரிமையாளர்கள் தெரிவிப்பு

வெதுப்பக தொழிலை தொடர்ந்தும் நடத்திச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.


கோதுமை மாவின் விலை மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளமையே இதற்கு காரணம் எனவும் சங்கத்தினர் கூறியுள்ளனர்.

செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலை 35 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் 50 கிலோ கிராம் எடை கொண்ட கோதுமை மா மூடை ஒன்றின் விலை 12 ஆயிரத்து 500 ரூபா வரை அதிகரித்துள்ளது. 4 ஆயிரம் ரூபாவுக்கும் குறைவாக இருந்த கோதுமை மா மூடை 12 ஆயிரத்து 500 ரூபா கொடுத்து கொள்வனவு செய்ய முடியாத நிலைமை வெதுப்பக உரிமையாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

சமையல் எரிவாயு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு தமது தொழிற்துறையின் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்துள்ளது எனவும் ஜெயவர்தன மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், வெதுப்பகங்களில் தயாரிக்கப்படும் பாண் உட்பட சிற்றுண்டிகளின் விலைகள் மேலும் அதிகரிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# பேசாதவர் பேசினார்; பெரு வெளிச்சமாகினார்!

## குமரகுருபரர் குருபூசைத்தினம் இன்று

– மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா –
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா)

ஞானிகளின் வரலாறு நமக்கென்றும் பெருவியப்பே. பிறப்பும் வியப்புத்தான். அவர்கள் வாழ்வும் வியப்புத்தான். அவர்களின் செயல்களும் வியப்புத்தான். அவர்களின் ஆற்றலும் வியப்புத்தான். வியப்பினை வரமாக்கி மாநிலத்தில் வந்து சேர்ந்தவர்களாகவே ஞானிகள் விளங்குகிறார்கள். நடந்திருக்குமா என்று ஐயங்கள் எழுந்திடும் வகையில் அவர்களின் வாழ்வையே நாம் உற்று நோக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அப்படி வியப்புடன் நோக்கும் வண்ணம் ஒருவர் மாநிலத்தில் பிறக்கிறார்.

அல்லும் பகலும் அனைவரதமும் ஆண்டவனையே அகமிருத்தி வாழ்ந்து வந்தவர்களுக்கு ஆண் குழந்தை பிறக்கிறது. அளவிலா ஆனந்தம் அடைகிறார்கள் பெற்றவர்கள். ஆனால் அவர்களின் அளவிலா ஆனந்தமோ ஒரு மட்டோடு நின்று விடுகிறது. அழகான ஆண்பிள்ளை அம்மா, அப்பா என்று மழலை மொழியால் அழைப்பான் என்று ஆவலுடன் பார்த்திருந்த பெற்றாருக்கு பெருத்த ஏமாற்றமே கிடைத்தது. ஆசையுடன் பிறந்த ஆண்பிள்ளை பேசமுடியாத பிள்ளையாக இருப்பதைக் கண்டதும் பெற்றவர்கள் பேதலித்தே நின்றார்கள். எந்தக் கடவுளுக்கு விரதம் இருந்து இந்தக் குழந்தையைப் பெற்றார்களோ அந்தக் கடவுளின் சன்னதிக்கே பிள்ளையையும் கொண்டு அழுதபடி ஓடினார்கள். ஆண்டவன் சன்னதியில் குழந்தையைக் கிடத்தி நீ தந்த குழந்தை பேசாதிருக்கின்றான். அவனைப் பேச வைத்திடு. இல்லாவிடின் நாங்கள் மடிந்து விடுவோம் என்று பெரும் வேண்டுதலை விடுத்து பக்கமிருந்த கடலை நோக்கி ஓடினார்கள்.

வைதாரையும் வாழவைப்பவன் முருகன் அல்லவா! அந்த முருகன் சன்னதியில் மனமுருகிடும் அடியாரின் வேண்டுதல் வீணாகி விடுமா? குரல் கேட்டதும் குமரன் அருள் சுரந்தான். பேசாமல் இருந்த பிள்ளை பேசியது. பேசியதே அந்தப் பரம்பொருளான முருகனைப் பற்றியே ஆகும். ஐந்து வயதுவரை பேசாதிருந்த அந்தப்பிள்ளை அரன் மைந்தனை அகமிருத்தி திருச்செந்தூர் கந்தர் கலிவெண்பா என்னும் அற்புதமான பொக்கிஷத்தை திருவாய் மலர்ந்தருளுகிறது. பிள்ளையின் குரல் காதில் கேட்டதும் அளவிட முடியா ஆனந்தத்துக்கும், ஆச்சரியத்துக்கும் ஆட்பட்ட பெற்றவர்கள் தங்கருத்தை மாற்றி சன்னிதானதுக்கு ஓடோடி வந்தார்கள். கந்தப் பெருமான் குருபரா எனவழைத்தார் என்பதைக் கேள்வியுற்ற பெற்றவர்கள் அந்தக் குருபரனோடு சேர்த்து, குமரனருளால் பேசுந்திறன் வாய்த்தமையால் குமர குருபரன் என்றே தமது பிள்ளைக்கும் பெயரினைச் சூட்டி பேரானந்தம் அடைந்தார்கள். திருச்செந்தூர் பதியில்தான் இந்த அற்புதம் நிகழ்ந்ததாய் குமரகுருபரர் வரலாற்றால் பார்க்கக்கூடியதாக இருக்கிறது. ஐந்து வயதுவரை ஒரு வார்த்தை கூடப் பேசாதிருந்த பிள்ளை கந்தர் கலி வெண்பா என்னும் தத்துவ நூலினை எப்படித் தந்திருக்க முடியும் என்று ஒரு ஐயம் எல்லோரிடமும் எழத்தான் செய்யும்.

இங்குதான் ஒரு கருத்தை மனமிருத்துதல் யாவருக்கும் அவசியமாகிறது. மூன்று வயதில் ஒரு குழந்தை அந்த முதல்வனையே காணுகிறது. காணுவதுடன் நின்றுவிடாமல் தமிழ் மழையாகவும் பொழிந்து நிற்கிறது. அதுவும் சாதாரண தமிழ் மழை அல்ல! இனிமைத் தமிழ் மழை! இங்கிதத் தமிழ் மழை! செறிவான தமிழ் மழை! சிந்தனைகள் நிறைந்த தமிழ் மழை! அநதச் சின்னவயதில் எப்படி அந்தக் குழந்தை அப்படிப் பாடியது என்பதையும் இங்கு மனமிருத்திப் பார்ப்பது உகந்ததாய் இருக்கும் அல்லவா? அதைத்தான் முன்னைத் தவம் , முன் ஞானம் என்கிறோம். இங்கே ஐந்து வருடங்கள் பேசாதிருந்த பிள்ளை பேசப் புறப்பட்டதும் அதன் வாயிலிருந்து வெளிவந்ததும் தமிழால் ஆகிய தத்துவமே மூன்று வயதில் ஞானம் அன்று ஞானசம்பந்தக் குழந்தைக்கு வாய்த்தது. பேசாதிருந்த பிள்ளைக்கு ஐந்துவயதில் ஞானம் வாய்த்திருக்கிறது.

ஞானம் என்பது எப்பொழுது யாருக்குக் கிடைக்க வேண்டுமோ அப்பொழுதுதான் அது கிடைக்கும், வெளியில் வரும் என்பதுதான் உண்மை நிலையாகும். அப்படித்தான் குமரகுருபரரை நாம் பார்த்திடல் பொருத்தமாய் அமையும். ஐந்து வயதுவரை மௌனத்தில் இருந்திருக்கலாம். மௌனம் என்பதுதான் மிகவும் உயர் நிலையாகும். அந்த மௌனத்தில் அந்தப் பரம் பொருளினையே அகமெண்ணியபடி வாய் பேசாதும் இருந்திருக்கலாம் என்று ஒரு சிந்தனையையும் ஆன்மீகத்தில் திளைத்தவர்கள் தெரிவிப்பதும் நோக்கத்தக்கது. அவ்வாறு அவர்கள் தெரிவிப்பதற்குக் காரணம் குமரகுருபரர் வழங்கிய படைப்புக்கள் எனலாம். இலக்கணம், இலக்கியம், தத்துவம் அறியாதவர் அவற்றைத் தேடி முறைப்படி கற்காதவர் எப்படி – இத்தனை அரியவற்றை ஆக்கினார் எனும் நிலையில் ஆன்மீகத் தலைவர்கள் தெரிவிக்கும் கருத்துக்கு உடன்பாடு சொல்லாமல் இருந்திட முடியாமலே இருக்கிறோம். இங்குதான் கருவிலே திரு நிறைந்தவராக குமரகுருபரர் இருந்திருக்கிறார் என்பது புலனாகிறது. இப்படியாய் அமைந்தவர்களைத்தான் ஞானவான்கள் என்று அழைக்கின்றோம்.

வாய்ந்திறந்ததும் வெளிவந்த திருச்செந்தூர் கந்தர் கலிவெண்பா சாதாரணமானது அல்ல. அதனுடைய உட்பொருளினை உற்று நோக்கும் ஆன்மீக ஆளுமைகள் அதனை குட்டிக் கந்தபுராணம் என்று உச்சிமேல் வைத்துப் போற்றியே நிற்கிறார்கள்.

கந்தபுராணத்தை எங்களின் சொந்த புராணம் என்று கொள்ளும் ஒரு வழக்கம் எங்களிடம் நிறைந்தே காணப்படுகிறது. அந்தப் புராணத்துடன் இந்த குட்டிக் கந்தபுராணத்தையும் கருத்திருத்துவதும் சிறப்பாய் இருக்கும் என்று எண்ணுகின்றேன். கந்தர் கலிவெண்பாவில் – திருமுருகாற்றுப்படையினையும் காணலாம், அருணகிரியாரின் திருப்புகழையும் காணலாம் என்று அறிஞர்கள் சொல்லுவார்கள். அத்தனை சிறப்புக்களையும் கொண்டு விளங்குவதால் குமரகுருபரரின் முதல் வெளிச்சமாய் கந்தர் கலிவெண்பா பிரகாசித்துப் பக்தியுலகில் நிற்கிறது.

பக்திச்சுவையினையும், தத்துவ செறிவினையும், சொற்சுவையினையும், பொருட் சுவையினையும் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது என்பதும் நோக்கத்தக்கது. இதனைப் பாராயணம் செய்தால் வந்தவினையும், வருகின்ற வினைகளும் காணாமலே ஓடி விடும் என்பதையும் கருத்திருத்தல் வேண்டும்.

குமரகுருபரர் ஆன்மீக வாதியாய் இருந்தார். அறநெறி காட்டுபவராய் இருந்தார். சமுதாய சிந்தனை மிக்கவராகவும் இருந்தார். தமிழ் இலக்கியப் பரப்பில் முத்திரை பதித்தவராகவும் இருந்தார். அது மட்டுமன்றி தவநெறியில் உயர்ந்தும் தனி ஒழுக்கத்தில் தலை சிறந்தும் அவர் இருந்திருக்கிறார். அவரின் அளவிட முடியாத ஆற்றல்களை யாவரும் அறியும் வண்ணம் அவரின் ஆக்கங்கள் அனைத்துமே அடையாளமாக இருக்கின்றன. பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான குமரகுருபரர் – தனது குருவைத் தேடியதும், குருவின் ஆணையின்படி சைவத்தைப் பரப்பிடப் பயணப்பட்டதும் அதற்காக அவர் பட்ட சோதனைகளும், வேதனைகளும் அவரை உயர் ஞானியாகவே பார்க்கும் வண்ணம் ஆக்கி



யேயிருக்கின்றன.

மாசிலா மணியான ஒருவர் இவரின் குருவாய் வாய்த்ததே ஒரு சோதனைதான். உன்னால் பதில் சொல்ல முடியா நிலையில் உன்னை யார் கேள்வி கேட்கிறாரோ, நீ அவ்வேளை சொல்வதறியாது நிற்கிறாயோ அங்குதான் உன் குருவைக் காண்பாய் என்று அசரீரி அவருக்கு குறிகாட்டி நின்றது. ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள என்னும் பெரிய புராணப்பாடலின் அனுபவத்தைச் சொல்லு என்று கேட்க அதற்கு உரிய பதிலினைக் கூறவியலாது மௌனித்து நிற்கிறார் குமரகுருபரர். அப்பொழுது அவர் மனத்தில் கண்டேன் குருவை என்னும் உணர்வு எழுகிறது. அவரின் அடி பணிகிறார். தொடர்கிறார் அவரிட்ட பணியை அந்தக் குருதான் தருமபுர ஆதீனத்தின் தலைமைப் பதவியிலிருந்த மாசிலாமணித் தேசிகராவார்.

தமிழகத்திலிருந்து வடநாட்டுக்குச் சென்று சைவத்தை நிலை நிறுத்தி, அங்கு சைவத்துக்கென ஒரு மடத்தினை நிறுவியவர் என்னும் பெருமையினைப் பெற்றவராக குமரகுருபரர் மட்டுமே விளங்குகிறார், அதுவும் தமிழராக இருந்திருக்கிறார் என்பதே முக்கியமாகும். குமரகுருபரர் வடநாடு சென்று மடம் அமைத்திட உத்தரவு பெறுவதற்கு அக்காலத்தில் இருந்த இந்துஸ்தானி பேசுகின்ற முகமதிய மன்னனையே நாடும் தேவை இருந்தது. இவருக்கோ இந்துஸ்தானி தெரியாது. அவனுக்கோ தமிழ் தெரியாது. ஆனால் அவனுடைய தாய் மொழியில் சரளமாய் பேசினார் குமரகுருபரர். எப்படி இது நடந்தது. அதனை விளக்கவே சகல கலா வல்லி மாலை சான்றாக வந்து நிற்கிறது. சகலகலாவல்லி மாலையினைப் பாடியதும் இந்துஸ்தானி அவர் நாவில் அமர்ந்து விடுகிறது. சகலகலைகளுக்கும் அதிபதியான கலைமகள் கருணையினைப் பெற்று விடுகிறார் குமரகுருபரர். சைவத் தமிழர்களுக்குக் கிடைத்த பெரும் வரப்பிரசாதமாகவே சகலகலா வல்லிமாலையினைப் பார்க்கவேண்டும். ஒவ்வொரு சொல்லும் , ஒவ்வொரு பொருளும், உள்ளத்தில் பக்தியின் உணர்வினை, தமிழின் உணர்வினை, இறையின் உணர்வினை நிச்சயமாகவே எழச் செய்துவிடும் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை எனலாம். நவராத்திரி என்றதும் முன்னுக்கு வந்து நிற்கும் பக்திப் பாமாலை சகலவல்லி மாலைதான். அதனை மனமுருகிப் பாடுவதனைச் சகல சைவத்தமிழ் மக்களும் பெருவிருப்பமாக்கியே இருக்கிறார்கள்.

திருவைகுண்டத்தில் பிறந்த குமரகுருபரரை சிற்றிலக்கிய வேந்தர் என்று பாராட்டுவது உகந்ததாகவே இருக்கும். அந்தளவுக்கு சிற்றிலக்கியத்தில் அவர் முத்திரை பதித்தவராகிறார் என்பதுதான் உண்மை. அவரின் படைப்பாக கந்தர் கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம் , திருவாரூர் நான்மணிமாலை, முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், சிதம்பரமும் மணிக் கோவை, பாண்டார மும்மணிக்கோவை, காசிக் கலம்பகம், சகலகலாவல்லி மாலை, மதுரை மீனாட்சியம்மன் குறம், தில்லைச் சிவகாமி அம்மை இரட்டைமணி மாலை, கயிலைக் கலம்பகம். காசித்துண்டி விநாயகர் பதிகம். சிற்றிலக்கியத்துக்கு எத்தனை கொடைகளை வழங்கியிருக்கிறார் என்பதை அவரின் படைப்புகளில் இருந்து பார்த்துவிடக் கூடியதாக இருக்கிறதல்லவா!

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் பாடப்பட்ட நிலையில் மீனாட்சி அம்மனே குழந்தையாய் வந்து அமர்ந்திருந்து கேட்டதாகவும், குமரகுருபரரின் தமிழ்ச் சுவையினைக் கண்டு முத்துமாலையினைக் கழுத்தில் அணிவித்து அருள் பாலித்ததாகவும் ஒரு வரலாறு சொல்லப்படுகிறது. நாத்திகர்கள் இதனை நம்புகிறார்களோ தெரியாது – ஆனால் , இறைவனது ஆசியினைப் பெற்ற தமிழ்ப் புலவராக வெளிச்சமிட்டுக் காட்டப்படுகிறார் என்பதுதான் இங்கு மனத்திருத்த வேண்டிய கருத்து. இதனால் இவரை வரகவி என்றும் பார்க்கலாம் அல்லவா! மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழினைப் போற்றாத தமிழ் அறிஞர்கள் இல்லை என்றே சொல்லலாம். அந்தளவுக்கு சொற்சுவையும், பொருட்சுவையும் , அருட்சுவையும் இருங்கே அமைந்த பொக்கிஷம் என்றே எண்ண முடிகிறது.

குமரகுருபரரின் அறச்சிந்தனைகள் மட்டுமல்லாது அவரின் கல்விச் சிந்தனைகளும் கருத்திருத்த வேண்டியனவேயாகும். சைவத்தின் காவலனாய் விளங்கினார். தமிழ் இலக்கியத்தில் தனியான இடத்தினைப் பெற்றவராகவும் விளங்கினார். சமயத்தின் சாறாக இருந்து சரித்திரமாய் ஆகியவராய் இருந்தாலும், சமுதாயச் சிந்தனை மிக்கவராகவும் விளங்கி இருக்கிறார் என்பதும் நோக்கத்தக்கதாகும். சமயத்தில் நிற்பவர்கள் தத்துவங்களைச் சொல்லிவிட்டு நிற்பவர்களாய் இருப்பதைப் பெரும்பாலும் காணுகிறோம். ஆனால் பேசாதிருந்து பின் பேசப் புறப்பட்ட குமரகுருபரரோ தாய்மொழியான தமிழை நேசிக்கிறார். குருவை நேசிக்கிறார். தமிழ் இலக்கியத்தை நேசிக்கிறார். சமூகத்தை நேசிக்கிறார். நாத்திகர் போற்றும் வகையில் அவர்களின் அகத்தினாலும் நேசிக்கப்படுகிறார். ஆத்திகரும், நாத்திகரும், நேசிக்கும் ஒருவராக குமரகுருபரர் விளங்கி இருக்கிறார் என்பதுதான் அவரை இன்றுவரை நாங்கள் அனைவருமே போற்றிப் பூசித்து அவருக்கென்று குருபூசை நன்னாளைக் கொண்டாட வைத்திருக்கிறது என்பதுதான் உண்மையாகும்.

# சொத்துக்களை சேதப்படுத்தியவர்களை கைதுசெய்ய காட்டும் ஆர்வத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டவர்மீது காட்டுக!

## முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கோரிக்கை



நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் வாதிகளின் வீடுகள் மற்றும் சொத்துக்களை சேதப் படுத்தியவர்களைக் கைது செய்வதில் காண்பிக்கும் ஆர்வத்தை , காலி முகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டவர்களை கைது செய்வதிலும் காண்பிக்குமாறு சகல தரப்பினரையும் கேட்டுக்கொள்கிறேன் என முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தனது முகநூல் பக்கத்தில் பதிவொன்றை இட்டு இதனைத் தெரிவித்துள்ள அவர் அதில் மேலும் குறிப்பிட்டிருப்பவை வருமாறு –

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீதான தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துமாறு கோரி ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். இதற்கு நாம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின் றோம்.

எவ்வாறிருப்பினும் இந்தக் கடிதத்தை தற்போது அரசாங்கத்தின் ஒரேயொரு முதன் மையான அதிகாரியாகவுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அத்தோடு குறித்த கடிதத்தின் ஊடாக மேற்குறிப்பிட்ட நடவடிக்கை தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவை ஏனைய அதிகாரிகளுக்கு ஆணையிடுமாறு வலியுறுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள் கின்றேன்.

தாக்குதல்களை மேற்கொண்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று ஆரம்பத்தில் குரலெழுப்பிய பலரும் இன்று வெவ்வேறு காரணிகளுக்காக ருவன் விஜேவர் தனவால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தைப் போன்றதொரு நடவடிக்கையை கூட முன்னெடுப்பதற்கு தயக்கம் காண்பிப்பதாகத் தெரிகிறது.

வீடுகள் உள்ளிட்ட சொத்துக்களை சேதப்படுத்தி யவர்களை இனங்காண்பதிலும், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதிலும் காட்டும் ஆர்வத்தை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் மீது தாக்குதல்களை நடத்தியவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கையிலும் காண்பிக்குமாறு சகல தரப்பினரிடமும் கேட்டுக் கொள் கின்றேன்.

அத்தோடு இது தொடர்பில் குரலெழுப்புமாறு அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களிடமும் கேட்டுக் கொள்கின்றேன்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, சுயாதீனமான செயற்படும் பொதுஜன பெரமுன குழு, தேசிய சுதந்திர முன்னணி, பிவிதுரு ஹெல உருமய, ஜனநாயக இடதுசாரி முன்னணி, லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூ–னிஸ்ட் கட்சி, மக்கள் கட்சி உள்ளிட்ட சகல தரப்பின ரையும் இது தொடர்பில் அவதானம் செலுத்துமாறு விசேடமாகக் கேட்டுக் கொள்கின்றேன் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

# பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பில் ஜனாதிபதி பொறுப்புக்கூற வேண்டும்

## கிரியெல்ல தெரிவிப்பு

ஆளும் தரப்பினதும், நாடாளுமன்ற உறுப் பினர்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தாத பாதுகாப்பு அமைச்சர் எதற்கு? பொது மக்கள் பாதுகாப்பு தொடர்பில் ஜனாதிபதி நாடாளுமன் றிற்கு பொறுப்புக்கூற வேண்டும்.

பாதுகாப்பு விவகாரத்தில் ஜனாதிபதி பொறுப் பில் இருந்து விலகியுள்ளார் என எதிர் தரப்பின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றில் இடம்பெற்றகூட்டத்தொடரின் போது ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை நிலையியல் கட்டளையை ஒத்தி வைப்பு விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள வேண் டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் முன்வைத்த யோசனையை உறுதிப்படுத்தி உரையாற்றுகையில் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அரசமைப்பின் 42ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் பொது மக்கள் பாதுகாப்பு தொடர்பில் ஜனாதிபதிநாடாளுமன்றத்துக்குப்பொறுப்புக்கூற வேண்டும். பொது மக்கள் பாதுகாப்பிற்கும், நடை முறையில் அமுல்படுத்தப்பட்டுள்ள சட்டங்க ளுக்கும் இடையில் பாரிய வேறுபாடு இருப்பதை அவதானிக்க முடிகிறது.

சமூக கட்டமைப்பில் கடந்த ஒருமாத காலமாக இடம்பெறும் சம்பவங்களை கொண்டு ஜனாதிபதி சுமார் 30 தடவைகளுக்கும் மேலாக தனது பொறுப்பில் இருந்து விலகியுள்ளமை உறுதிப்ப டுத்தப்பட்டுள்ளது. ஆளும் தரப்பினரினதும், எதிர் த் தரப்பினரது பாதுகாப்பை கூட உறுதிப்ப டுத்த முடியாத பாதுகாப்பு அமைச்சர் எதற்கு?

பிரித்தானியர் ஆட்சிகாலத்தில் சபாநாயகர் பதவி அரச தலைவர்களை பாதுகாக்கும் நோக் கில் அறிமுகப்படுத்தப்பட்டாலும்,பரிமாண மா றத்தைத் தொடர்ந்து சபாநாயகர் பதவி நாடாளு மன்ற உறுப்பினர்களின் உரிமைகளை பாது காக்கும் வகையில் மாற்றமடைந்தது. ஆகவே சபாநாயகர் என்ற ரீதியில் சகல உறுப்பினர் களுக்கும் சமவுரிமை வழங்கப்பட வேண்டும். – என்றார்.

# வெளிநாட்டு யுவதியை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் மூவர் கைது

இலங்கைக்கு விஜயம் செய்த வெளிநாட்டு யுவதி ஒரு வரை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் மூவர் பொலி ஸாரால் கைது செய்யப்பட் டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 40, 28 மற்றும் 23 வயதுடைய உணவக உரிமையாளர் மற் றும் அதன் ஊழியர்கள் இருவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களும் பலப்பிட்டிய நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட மியன்மார் யுவதி விஜயம் ஒன்றுக்காக இலங்கை வந்துள்ளார்.

அதன் பின்னர் அவர் நாட் டின் பல பகுதிகளுக்குச் சென்று தங்குவதற்காக பெந்தோட் டாவில் உள்ள ஹோட்டலுக்கு வந்துள்ளார்.

தனது தோழி ஒருவருடன் பெந்தோட்டையில் உள்ள உணவகம் ஒன்றுக்கு சென்று உணவு வாங்கி வந்த நிலை யில், அதில் போதைப் பொருள் கலந்து கொடுக்கப்பட்டதாக அவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

பின்னர் அவரது தோழி மீண்டும் ஹோட்டலுக்குச் சென்று சுயநினைவுக்கு வந்த நிலையில் தனது தோழி அங்கு இல்லாததை அறிந்து அவர் தங்கியிருந்த ஹோட்டல் நிர் வாகத்துக்கு தகவல் கொடுத் துள்ளார்.

இதனையடுத்து அவர்கள் பொலிஸ் நிலையத்துக்கு வந் துள்ளதுடன் அப்போது துஷ் பிரயோகம் செய்யப்பட்டுள் ளார் எனக் கூறப்படும் வெளி நாட்டுப் பெண்ணும் பொலிஸ் நிலையத்துக்கு வந்துள்ளார்.

அதனடிப்படையில் 26 வய துடைய வெளிநாட்டு யுவதி யிடம் வாக்குமூலம் பெற்று பலப்பிட்டிய வைத்தியசாலை யில் சேர்க்க பொலிஸார் நடவ டிக்கை எடுத்தனர்.

# அரச ஊழியர்களைக் கடமைக்கு அழைப்பதை மட்டுப்படுத்த முடிவு

அரச ஊழியர்களை கடமைக்கு அழைப்பதை மட்டுப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் எரிபொருள் உள்ளிட்ட வளங்களின் பற்றாக்குறை காரணமாக அரசாங்க செலவி னங்களைக் கட்டுப்படுத்தும் வகையிலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாய கம் கே.டி.எஸ்.ருவன்சந்திர தெரிவித்துள் ளார்.

இது தொடர்பில், பொதுநிர்வாக, உள்நாட் லுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அலுவலகப் பணிகளுக்கு இடையூறு ஏற்படாதவகையில் அத்தியாவசிய ஊழியர்களை மாத்திரம் வரவழைத்து நிறுவனத் தலைவரின் விருப்பத்திற்கேற்ப செயற்பட அனுமதிக்குமாறு அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், தொலைதூரத்தில் இருந்து பணிக்கு வரும் அதிகாரிகளை அவர்கள் வசிக்கும் இடத்துக்கு அருகில் உள்ள பணியிடத்திற்கு தற்காலிகமாக இணைக்கத் தேவையான அதி காரங்கள் நிறுவனங்களின் தலைவர்களுக்கு வழங்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மின்சாரம், எரிபொருள், தண்ணீர் போன்ற வற்றைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துவதே இதன் நோக்கமாகும் எனவும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் கே.டி.எஸ். ருவன்சந்திர தெரிவித்துள்ளார்.

# டெங்கு நோய் பரவும் அபாயம்

நாட்டில் தற்போது நிலவும் மழையுடனான வானிலை காரணமாக டெங்கு நோய் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அத்துடன், கடந்த சில நாள்களாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இந்த மாதத்தில் இதுவரையான காலப்பகுதியில் 2 ஆயிரத்து 797 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியால் வைத்தியசாலைகள் மூடப்படும் அபாயம்

நாட்டில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் அதி தீவிர சிகிச்சை மற்றும் சிகிச்சைப் பிரிவுகளை பேணுவதற்குத் தேவையான இரத்த வாயு பகுப்பாய்வு கருவிகள் இல்லாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனால் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகளை பராமரிக்க முடியாமல் கடும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான நிலைமையில், தீவிர சிகிச்சை மற்றும் தீவிர சிகிச்சை பிரிவுகளில் குளிரூட்டும் இயந்திரங்களில் சிகிச்சை பெறும் நோயாளிகள் அதிக ஆபத்தில் உள்ளனர்.

மேலும் இரத்த வாயு பகுப்பாய்வு கருவிகள் இல்லாமல் அந்த அலகுகளை இயக்குவது கூட பயனற்றது என்று சுகாதார வல்லுநர்கள் கூறுகின்றனர்.

அந்த இயந்திரங்களுக்காக செலுத்த வேண்டிய 30 கோடி ரூபா கொடுப்பனவு செலுத்துவதை 4 மாதங்களுக்கு மேலாக சுகாதார அமைச்சு தவிர்த்து வந்தமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய பிரதமரினால், ருவான் விஜேவர்தனவை சுகாதார சேவையை கவனிப்பதற்காக நியமித்துள்ள போதி லும், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உரிய தரப்பினருடன் தேவையான கலந்துரையாடல்கள் இதுவரையில் இடம்பெறவில்லை என சுகாதார நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.





# தாயகம்.சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க கோருகின்றது முள்ளிவாய்க்கால் பிரகடனம்

ஈழத்தமிழர்களின் பூர்வீக தாயகமாக வடக்கு – கிழக்கை அங்கீகரித்து, சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிக்க வேண்டும்.

– இவ்வாறு முள்ளிவாய்க்கால் பிரகடனத்தில் கோரப்பட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்று கூடிய காலகட்டத்தில் ஒரு குறுகிய நிலப்பரப்பில் மக்கள் முடங்கி இருந்த காலப்பகுதியிலே பல்லாயிரக்கணக்கான மக்கள் கொன்றொழிக்கப்பட்ட தமிழின படுகொலையின் 13 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று (புதன்கிழமை) முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது .

இந்நிகழ்வில் வடக்கு கிழக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பினால் வெளியிடப்பட்ட முள்ளிவாய்க்கால் பிரகடனத்தில் இவ்வாறு கோரப்பட்டுள்ளது

இந்த முள்ளிவாய்க்கால் பிரகடனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

ஈழத் தமிழர்களின் வரலாற்றில் துயர்மிகு நாள்களில் ஒன்றாகிய முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவு நாளான மே 18 இல் மீண்டும் ஒரு தடவை நாம் கூடியுள்ளோம். இந்த நாள் எங்கள் தேசத்தின் மீது தொடர்ந்து வந்த சிங்கள அரசுகள் நிகழ்த்தி வருகின்ற இனவழிப்பின் பாரதூரத் தன்மையையும், அச்ச மூட்டும் அதன் பரிமாணத்தையும், அவற்றால் எங்களுக்கு ஏற்பட்ட தாங்கொணா இழப்புகளையும் நினைவு கூர்வதற்கான ஒரு நாள் மட்டுமல்ல.

எத்தனை துயரங்கள் வந்தாலும், அழுத்தங்கள் தரப்பட்டாலும், நாங்கள் தோற்றுப் போக மாட்டோம், முள்ளிவாய்க்கால் எமது எழுச்சியின் முடிவல்ல எனப் பிரகடனம் செய்கின்ற ஒரு நாளுமாகும்.

இந்த நாளில் முள்ளிவாய்க்கால் மண்ணிலே வீழ்ந்திட்ட பல இலட்சக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்களையும், தமிழ் மக்களின் உரிமைகளுக்காக தமது உயிர்களைத் தியாகம் செய்து விதையாகிப்போன மற்றும் தங்கள் எதிர்காலத்தை – வாழ்க்கையை – எங்களுக்காக தியாகம் செய்து இன்று துன்பத்தில் வாடுகின்ற எங்கள் செல்வங்களையும் நினைந்து நாங்கள் கண்ணீர் சிந்துகின்றோம்.

முள்ளிவாய்க்காலைத் தொடர்ந்தும் அதனை ஒட்டிய நாள்களிலும் தாயகமெங்கும் பலவந்தமாகக் காணாமலாக்கப்பட்ட எங்கள் உறவுகளையும் நாங்கள் இந்த நேரத்தில் நினைவு கூருகின்றோம்.

உலகின் மனசாட்சி எங்கள் துயரங்களைத் தொடர்ந்தும் பாராமுகமாய் உள்ளது. எங்களுக்கு நடந்ததை இனப்படுகொலை என்றோ, அல்லது இன்றும் எங்களுக்கு நடந்து வருவதை இனவழிப்பு என்றோ பெயரிட உலகின் அதிகார சக்திகள் மறுத்து வருவதையும் இந்த நேரத்தில் நாங்கள் கவலையுடன் கவனித்தே நிற்கின்றோம்.

சிங்கள மக்களின் மனவுலகு விசித்திரமானது. அது மகாவம்ச ஐதீகத்தினடிப்படையில் பௌத்த – சிங்கள மேலாதிக்க மனப்பாங்காகப் பின்னப்பட்டுள்ளது. இத்தீவு முழுவதும் தமக்கென வாக்களிக்கப்பட்ட பூமி என்ற மகாவம்ச சொல்லாடலை உளமார நம்பும் சிங்கள தேசம் அதனையே தனது இயக்கு சக்தியாகக் கொண்டுள்ளது. 1948 இல் ஆங்கிலேயர் வெளியேறிய போது அதிஷ்டவசமாக முழுத் தீவையும் ஆள்வதற்குத் தமக்குக் கிடைத்த அதிகாரத்தைப் பயன்படுத்தி பௌத்த – சிங்கள பேரினவாதம் ஏனைய இனங்களை இனவழிப்புச் செய்ய ஆரம்பித்தது.

இனவழிப்பை நோக்காகக் கொண்டு சிறீலங்கா அரசியல் யாப்பு உட்பட அரசின் சகல கட்டுமானங்களும் ஆரம்பம் முதலே கட்டியெழுப்பப்பட்டன.பௌத்த – சிங்கள மேம்போக்கான மனப்பாங்கால் அவர்களிடையே உண்மையில் ஏற்பட்டுள்ள பயத்தை பேரினவாதமாக வளர்த்தெடுத்த சிங்கள அரசியல்வாதிகள்,தமது தேர்தல் வெற்றிகளுக்கானதும் ஊழல்களுக்கானதுமான கவசமாக வெற்றிகரமாகப் பாவித்து வருகின்றார்கள்.

சிங்கள மக்களின் பேரினவாத அபிலாஷைகளை பூர்த்தி செய்பவர்களே தேர்தல்கள் மூலம் அரசியல் தலைமைப் பீடங்களுக்கு வர முடியும் என்பதை சிங்கள மக்கள்தான் தமது வாக்களிக்கும் முறை மூலம் தமது அரசியல்வாதிகளுக்கு வெளிக்காட்டி வருகின்றனர். அதுவே மறுதலையாக

**ந.லோகதயாளன்**

அந்த அரசியல்வாதிகள் அதே மக்களைச் சுரண்டுவதற்கான பாதுகாப்பாகவும் மாறியுள்ளது. சிங்கள மக்களின் இந்த மனப்பாங்கு சிறீலங்கா அரசு தமிழ் மக்கள் மீதும் ஏனைய இனங்கள் மீதும் தொடர்ச்சியாக நிகழ்த்துகின்ற இனவழிப்பை மனிதாபிமானப் பிரச்சினையாகத்தன்னும் கருத முடியாத மன இறுக்கத்தை அவர்களிடையே ஏற்படுத்தியுள்ளது. சிங்கள மக்களின் இந்த மனப்பாங்கை பயன்படுத்துவதன் மூலம் தமது ஊழல்களையும், சுரண்டல்களையும் பெரும்பான்மை மக்களிடையே பேசு பொருளாகாமல் தவிர்க்க முடியும் என்ற பாடத்தையும் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும், பௌத்த மத நிறுவனங்களும் அறிந்து கொண்டுள்ளனர்.

ஆனால் இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னான காலம் என்பது தனியே அரசின் ஏனைய இனங்கள் மீதான இனவழிப்பு என்பதுடன் மட்டுப்பட்டிருக்கவில்லை. ஆரம்பம் முதலே அரசின் உள்ளடக்கம் ஊழல் என்பதையும் பொறுப்புக் கூறாத்தன்மையையும் தன்னகத்தே கொண்டிருந்தது. சகல அரச இயந்திரங்களும் இனவழிப்பை நோக்காகக் கொண்டிருந்ததால் மக்களுக்கான பேண்தகு பொருளாதார அபிவிருத்தி இலக்குகள் இலகுவில் தவிர்க்கப்பட்டன அல்லது புறந்தள்ளப்பட்டன.

ஏனைய இனங்கள் நன்மை பெற்றுவிடக்கூடாது என்பதற்காகப் பொருளாதார இலக்குகள் மாற்றியமைக்கப்பட்டன.

பெருமளவு நிதியும் மனித வளமும் ஏனைய இனங்களின் அடையாளங்களை அழிப்பதற்காக, இருப்புகளைச் சிதைப்பதற்காக செலவு செய்யப்பட்டன. இதே வேளை பௌத்த–சிங்கள பேரினவாதத்தின் அரசியல் கோட்பாடாக கவசமாக ஒற்றையாட்சி முறைமை மக்கள் மத்தியில் முன்னிலைப்படுத்தப்பட்டது.

மலையகத் தமிழரின் குடியுரிமை பறிக்கப்பட்டமை பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்தாமை சிங்கள அரசுக்கு ஏனைய தேசங்களின் இருப்பின் மீதும் ஆதிக்கத்தைச் செலுத்தலாம் என்ற துணிவைத் தந்தது.

மாறாக தமிழ் மக்கள் இனவழிப்புக்கு எதிராக எதிர்ப்பை வெளிக்காட்டியபோது – உரிமைகளைக் கோரிய போது – சிங்கள அரசு வன்முறையை பதிலாகக் கையிலெடுத்தது. அரசின் அடக்குமுறைகள் அழித்தொழிப்புகளுக்குப் பாதுகாப்பாகத் தமிழர்களின் எதிர்ப்பு வடிவங்களும் காலத்துக்குக் காலம் பரிமாண வளர்ச்சியடைந்தது. அத்தகைய வளர்ச்சிக்கு ஏற்ப அரசின் வன்முறைக் கொடூரங்களும் மிகையாக அதிகரிக்கத் தொடங்கின. இதன் உச்சக்கட்டமாக 2009ல் முள்ளிவாய்க்காலில் ஒரு பாரிய இனப்படுகொலை தமிழ் மக்கள் மீது ராஜபக்ஷ தலைமைதாங்கிய சிங்கள அரசால் நடத்தி முடிக்கப்பட்டது.

சிறீலங்கா அரசின் அந்த வெற்றி பௌத்த – சிங்கள மேலாதிக்க வெற்றியாக மடைமாற்றம் செய்யப்பட்டது.

நாட்டில் வெற்றிவாதம் திட்டமிடப்பட்ட வகையில் கட்டமைக்கப்பட்டது.ஏனைய இனங்கள் மற்றும் மீதான மேலாண்மையையும் தீவு முழுவதும் தமக்கென வாக்களிக்கப்பட்டது என்ற பேரினவாதச் சித்தாந்தங்களையும் மேலும் வலியுறுத்துவதன் மூலம் எந்த இனத்திற்கும் உரிய தனித்துவமான உரிமைகளை மறுதலிக்கும் வகையில் பௌத்த–சிங்கள பேரினவாத்தை மேலும் இறுக்கமடையச் செய்வதற்கு இந்த போர் வெற்றிவாதம் பயன்படுத்தப்பட்டது. பௌத்த – சிங்கள மேலாதிக்கம் அதன் வழி வந்த தீவு முழுவதும் தமக்கு வாக்களிக்கப்பட்ட பூமி என்ற கற்பிதம் அதனால் ஏற்பட்ட பேரினவாத அபிலாசைகள் அனைத்தையும் பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பை ராஜபக்ஷ அரசு கட்டியெழுப்பிய போர் வெற்றிவாதம் சிங்கள மக்களுக்கு வழங்கியது. அதேவேளை அந்த வெற்றியின் நாயகர்களாக ராஜபக்ஷ குடும்பம் தங்களை நிலை நிறுத்தும் வாய்ப்பையும் தவறவிடவில்லை.

70 ஆண்டு கால பேரினவாத அரசியலின் விளைவை தற்போது பொருளாதாரச் சீர்குலைவாக நாடு அனுபவிக்கின்றது. இன்று ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பேரழிவின் தாக்கங்கள் அனைத்து மக்களையும் தேசம், இனம் என்ற வேறுபாடு இன்றி பாதித்துள்ளது.

ஏழைகள் மட்டுமன்றி நடுத்தர வர்க்கத்தினர், மேற்தட்டு வர்க்கத்தினர், முதலாளிகள், தொழிலாளிகள் என அனைவரையும் பாதித்துள்ளது. உண்மையை ஆராய்ந்தறிய வரலாறு தந்துள்ள இந்த வாய்ப்பைப் பயன்படுத்தாமல் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு ராஜபக்ஷ ஆட்சியை மட்டும் காரணமாக்கி ஏனைய அரசாங்கங்களையும் எப்போதும் அழிவுகளின் பங்காளிகளாக இருக்கின்ற அதிகார வர்க்கத்தையும் இவற்றுக்கெல்லாம் மௌனமாக ஆதரவளித்த தங்களையும் இவை அனைத்துக்கும் அடிப்படைக் காரணமாக அமைந்து தம்மிடையே புரையோடிப் போயுள்ள பௌத்த – சிங்கள பேரினவாத மனநிலையையும் அதன் நவீன வெளிப்பாடான வெற்றிவாதத்தையும் பொருளாதார பேரழிவுக்கான குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்யும் போக்கையே இன்று போராடுபவர்க ளிடையேயும் எம்மால் பார்க்க முடிகின்றது.

ஊழலுக்கும் அதிகார துஷ்பிரயோகங்களுக்கும் பொறுப்புக் கூற அழைப்பு விடுக்கும் போராட்டக்காரர்களால் இன்றுவரை தமிழ் மக்கள் மீதான இனவழிப்புக்கு மட்டுமல்ல, இறுதி நேரத்தில் முள்ளிவாய்க்காலில் செய்யப்பட்ட இனவழிப்புக்காகத் தன்னும் பொறுப்புக் கூற வேண்டும் என இன்றுவரை கூற முடியவில்லை.

இந்த மே 18ல் தொடர்ந்து வந்த சிறீலங்கா அரசாங்கங்கள் தமிழ் மக்களின் தேசியத்தின் மீதான இனவழிப்புநடவடிக்கைகளையும் ஒட்டு மொத்தமாக சிங்கள அரசுகள் செய்த பாரிய படுகொலைகளையும் ஈற்றில் 2009 இல் முள்ளிவாய்க்காலில் உச்சத்தை எட்டிய இனப்படுகொலையையும் நினைவு கூரும் நாம் சிங்கள மக்களுக்கு கூற விளைவது ஒன்றை மட்டுமே. இன்றைய உங்களின் நிலைக்கு நீங்கள் வினா ஏதுமின்றி தொடர்ந்தும் ஒற்றையை மையப்படுத்திய பௌத்த – சிங்களபேரினவாத அபிலாஷைகளின்பாற்பட்டு சிங்கள அரசாங்கங்களுக்கு அளித்து வந்த ஆதரவின் விளைவையே இன்று நாடுஅனுபவிக்கின்றது.

இந் நாளில் எங்களின் ஆத்மார்த்த கோரிக்கைகளை மீண்டும் ஒரு தடவை வலியுறுத்த விரும்புகின்றோம்.

1. நினைவுகூர்தலுக்கான உரிமையும் ஓர் அடிப்படை உரிமை. அது ஈழத்தமிழர்களின் பண்பாட்டு உரிமையும் கூட. ஈழத்தமிழர்களின் அந்த உரிமையை சிறிலங்கா அரசு ஒரு போதும் தடுக்க முடியாது.

2. தமிழினப் படுகொலைக்கு சர்வதேச விசாரணையை மீள வலியுறுத்துகின்ற அதே நேரத்தில் வடக்கு – கிழக்கில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள சிங்கள – பௌத்த மயமாக்கப்படும் தமிழர் தாயகம் உட்பட்ட கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு செயற்பாடுகள் அனைத்தையும் உடனடியாக நிறுத்த வேண்டும்.

3. ஈழத்தமிழர்களின் பூர்வீக தாயகமாக வடக்கு – கிழக்கை அங்கீகரித்தல் வேண்டும்.

4.பௌத்த–சிங்கள பேரினவாதத்தின் அடக்குமுறைக்கான ஒரு பொறிமுறையே ஒற்றையாட்சி முறைமை என்பதை ஏற்றுக் கொண்டு சிறிலங்காவின் ஒற்றையாட்சியை அகற்றித் தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் வேண்டும்.

5.தமிழர்கள் ஒரு தேசமாக தங்களை அடையாளப்படுத்தத் தேவையான அனைத்து இயல்புகளையும் பண்புகளையும் கொண்டவர்கள் என்பதையும் அதன்வழி அவர்களுக்கு சுயநிர்ணய உரிமையும் ஒரு போதும் பராதீனப்படுத்தவியலாத இறைமையும் உள்ளது என்பதும் ஏற்கப்பட வேண்டும்.

மே 18 தனியே எமக்கான துயரத்தின் நினைவு கூரல் நாள் மட்டுமல்ல, இந்தத் தீவின் அரசால் மக்கள் ஆதரவுடன் ஓர் இனம் இனப்படுகொலை செய்யப்பட்டது, இன்று வரை இனவழிப்புக்கு உள்ளாகின்றது என்பதை உலகுக்கும் – குறிப்பாக இத்தீவின் சக தேசமான சிங்கள மக்களுக்கும் – சொல்வதற்கான ஒரு நாளுமாகும். இந்த நாள் தமிழர்கள் நாம் வீழ்ந்துவிடவில்லை வீழ்ந்தாலும் மறுபடியும் எழு வோம் என்று வீழ்ந்துபட்ட எம் உறவுகளுக்கு வாக்குறுதி அளிக்கும் ஒரு நாளுமாகும். இந்த உலகில் யார் பாராதிருந்தாலும், யார் எதிர்த்தாலும், நாங்கள் நிமிர்ந்தெழுவோம், போராடுவோம், விழுதெறிவோம். – என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் முள்ளிவாய்க்கால் நிகழ்வுகள்





தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நிவைவேந்தல் நிகழ்வு நேற்று (புதன்கிழமை) மட்டக்களப்பு கல்லடி சித்திவிநாயகர் ஆலய முன்றிலில் நடைபெற்றது.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் உபதலைவரும் முன்னாள் தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான பொன்.செல்வராசா தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது உயிர்நீர்த்தவர்களின் நினைவாக ஈகச்சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டதுடன் கூட்டுப்பிரார்த்தனைகளும் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவர் சீ.யோகேஸ்வரன் மற்றும் கிழக்கு மாகாண அமெரிக்க மிசனின் குரு முதல்வர் அருட்தந்தை லூத் ஆகியோரால் இந்த கூட்டுப்பிரார்த்தனைகள் முன்னெடுக்கப்பட்டதுடன் நினைவுரைகளும் நிகழ்த்தப்பட்டன.

இதன்போது முள்ளிவாய்க்கால் இனஅழிப்பின் வேதனைகளை வெளிப்படுத்தும் வகையிலான முள்ளிவாய்க்கால் கஞ்சியும் பகிரப்பட்டன.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், பா.அரியநேத்திரன், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் கி.துரைராஜசிங்கம், முன்னாள் கிழக்கு மாகாண உதவி தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் உட்பட மாநகரசபை உறுப்பினர்கள்,முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள், தவிசாளர்கள், உறுப்பினர்கள்,வாலிப முன்னணி உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## முள்ளிவாய்க்கால் நினைவு மன்னாரில் அனுஷ்டிப்பு!



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று (புதன்கிழமை) காலை 8 மணியளவில் மன்னாரில் இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் மன்னார் பஜார் பகுதியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த மக்களை நினைவு கூர்ந்து சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன் போது அருட்தந்தையர்கள்,பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அதனைத்தொடர்ந்து கலந்து கொண்டவர்களுக்கு காலை உணவாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வலி. கிழக்குப் பிரதேச சபையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!



வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையில் முள்ளிவாய்க்கால் படுகொலை ஈகைச் சுடரேற்றி அஞ்சலிக்கப்பட்டது.

நேற்று (புதன்கிழமை) காலை 7 மணிக்கு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாக ராஜா நிரோஷ் தலைமையில் ஒன்று கூடிய பிரதேச சபை உறுப்பினர்கள் பணியாளர்கள் ஈகைச்சுடரேற்றி அஞ்சலித்தனர்.

இந்த அஞ்சலியைத் தொடர்ந்து தவிசாளர், மற்றும் சபையின் உறுப்பினர்கள் செல்வதிசைநாயகம் தவநாயகம் ஆகியோர் அஞ்சலியுரையாற்றினர்.

இந்த அஞ்சலியுரைகளில் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட பாரதூரமான மனித உரிமைகளுக்கு நீதி நிலைநாட்டப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டது.


மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரச உள்ளூராட்சிக் கட்டமைப்பான பிரதேச சபை வருடாவருடம் உத்தியோக பூர்வமாக எந்த இடர்கள் ஏற்படுத்தப்படினும் நினைவேந்தும் உரிமையினை வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பிரித்தானியாவில் உணர்வுபூர்வமாக முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வு!

### நாடுகடந்த தமிழீழ அரசின் ஒழுங்கமைப்பில்







தமிழர் தாயகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வார நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டு வரும் சமவேளை, புலம்பெயர் நாடுகளில் இவ்வார நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்வரிசையில், பிரித்தானியாவில் குருதிக்கொடை, முள்ளிவாய்க்கால் கஞ்சி, பரப்புரை என்பன முன்னெடுக்கப்பட்டுள்ளன.

'உயிர்கொடுத்தவர்களுக்காய் உதிரம் கொடுப்போம்' எனும் தொனிப்பொருளில் Tooting Doner Centre, Croydon Doner Centre ஆகிய இடங்களில் 30 இற்கும் மேற்பட்டோர் இரத்த தானம் வழங்கியிருந்தனர். Aston Hall Hotel Aston, Sheffield பகுதியிலும் குருதிக்கொடை நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

2009 ஆம் ஆண்டு தமிழர்கள் மீதான சிங்கள பௌத்தபேரினவாதஅரசின் இனஅழிப்புபோர்க்காலம். கடும்யுத்த களம், உணவுத்தடை, மருந்துக்களுக்கு தடை, போர் தவிர்ப்பு வலயம் என்ற பெயரில் மக்களை கொத்துக் கொத்தாக தனது கொடிய ஆயுதங்களால் இனப்படுகொலை செய்து கொண்டிருந்தது. இந்த நெருக்கடியான பெருந்துயரான காலத்தில் மக்களின் வயிற்றுப் பசியினை நம்பிக்கையோடு கஞ்சி தீர்த்திருந்தது.

போராளிகள் தமக்கென ஒதுக்கப்பட்டிருந்த அரிசியினை மக்களின் பசிபோக்க கஞ்சியாக சமைத்து வழங்கியிருந்தனர். இதுவே 'முள்ளிவாய்க்கால் கஞ்சியாக' மக்களின் அப்பெருந்துயரை நினைவேந்திக் கொள்ளப்படுகின்றது.



இதேவேளை பிரித்தானியின் பல பாகங்களில் தமிழர் வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள், வைத்திய சாலைகள் போன்றவற்றில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கி எமது மக்கள் பட்ட துயரங்களை வேற்றின மக்களுக்கும், உலகநாடுகளுக்கும் உணர்த்த காட்சிப் படங்கள் மூலமாகவும், துண்டுப்பிரசுரம் மூலமாகவும் தெரிவித்திருந்தார்கள்.

மே18 தமிழீழ தேசிய துக்க நாள் என்பது நாம் துயரத்தில் துவண்டு போகும் நாளல்ல மாறாக எமது மக்கள் அடைந்த துயரத்தையும் உயிர்ப்பாய் உள்வாங்கி ஒரு தேசமாக பாதுகாப்பாகவும் கௌரவமாகவும் வாழ்வதற்கு சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழ அரசினை அமைப்பதே ஒரே வழி என உறுதிகொள்ளும் நாளாகும்.

# உலக தமிழ் மக்களால் மறக்க முடியாத மே 18!

## மட்டு. மாவட்ட முன்னாள் எம்.பி. சந்திரநேரு சந்திரகாந்தன் தெரிவிப்பு



தமிழ் மக்களின் இன அழிப்பின் முள்ளிவாய்க்கால் மே 18 மறக்கமுடியாத ஒருநாள். இந்த முள்ளிவாய்க்காலில் 58 ஆவது 59 ஆவது படைப் பிரிவால் நடந்தேறிய இந்த இனப்படுகொலை பற்றிய போர்க்குற்றம் விசாரிக்கப்பட வேண்டும். போர்க்குற்றத்தில் இருந்தவர்கள், செய்தவர்கள் விசாரிக்கப்படவேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் தெரிவித்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் நேற்று (புதன் கிழமை) ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

மே 18 என்பது முள்ளிவாய்க்காலில் இன அழிப்புக்கான நாள் எமது மக்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்ட நாள். எமது போராட்டம் நசுக்கப்பட்ட நாள். எனவே உலகிலுள்ள தமிழ் மக்கள் இந்த நாளை மறக்கமுடியாது.

அன்று எமது மக்கள் ஒவ்வொருவரும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடினர். ஆனால் மன உறுதியை மட்டும் விட்டுவிடவில்லை. அப்போது எங்களை அழிக்கும் போது கும்மாளமிட்டவர்கள் சிங்கள மக்களுக்கு கீரோவாகத் தெரிந்தவர்கள். இன்று அதே சிங்கள மக்களுக்கு வில்லனாகத் தெரிகின்றனர்.

எமது போராட்டத்தை மளுங்க வைப்பதற்கு பல துரோகத்தனங்கள் நடந்தன. போர் முடிந்ததும் தமிழ் மக்களின் வலியை அறிந்து கொள்ளாமல் எமது மக்கள் மீது தொடர்ச்சியாக அழுத்தங்களைக் கொடுத்து காணாமல் ஆக்கப்பட்டு நிலங்களை அபகரித்தனர் எமது பகுதிகளை ஆக்கிரமிப்பு செய்தனர்.

ஆனால் இன்று அவர்களுக்கு உறங்குவதற்கு வீடு இல்லாமல் எங்கு ஓடி ஒளிப்பது எனத் தெரியாது ஓடி ஒளிந்து நாட்டுக்குள் அகதியாக வாழ வைத்தது அந்த முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட ஆத்மாக்களின் செயலாகும்.

சிங்கள பேரினவாதம் அவர்களுக்கு ஒரு பாதகமான நிலை வரும்போது 2015 ஆண்டு தமிழ் தலைமைகளைப் பாவித்ததுபோல இந்த காலிமுகத்திடலில் இடம்பெற்றுவரும் இந்தப் போராட்டத்தில் பயன்படுத்த முற்பட்டனர்

இந்த காலிமுகத்திடல் போராட்டம் தமிழ் மக்களுக்கான போராட்டமல்ல ஆட்சியை மாற்றுமாறு செய்யப்படும் போராட்டம். எனவே இந்தப் போராட்டத்தில் பாதுகாப்புப் படையினரால் தமிழ் மக்களுக்கு நடந்த அநீதி மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட பூர்வீக நிலங்கள் மீண்டும் தமிழ் மக்களிடம் வழங்கப்பட வேண்டும் எனக் குரல் கொடுக்கவில்லை.

எனவே மஹிந்த, ரணில் இருந்தால் என்ன எதிர்கட்சியில் சஜித் இருந்தால் என்ன நாங்கள் தமிழ் தலைமைகள் ஒற்றுமையாக இல்லாத பட்சத்தில் எங்களை சிங்கள பேரினவாதம் அழித்துக் கொண்டிருக்கும்.

மே 18 கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த இந்த சிங்கள பேரினவாதம் இன்று இன ஒற்றுமையைப் பற்றி பேசுகின்றனர். எனவே 2015ஆம் ஆண்டு ஏமாற்றப்பட்டது போல மீண்டும் ஏமாற்றுப்படக்கூடாது அப்போது கண்ணைமூடிக் கொண்டிருந்தவர்கள் இப்போது தாங்கள் தான் தியாகிகள் என அடுத்த தமது அரசியலுக்காக இந்த முள்ளிவாய்க்கால் படுகொலையை பயன்படுத்தக் கூடாது. இது எமது மண்ணின் மக்களது இழப்பு. இதில் அரசியல் இலாபம் தேடவேண்டாம்.

முள்ளிவாய்க்காலில் நடந்தேறிய இனஅழிப்பை முதல்முதல் உலகத்துக்கு சொல்ல வந்தவன் நான் தான். ஆகவே, முள்ளிவாய்க்காலில் நடந்த வேதனையும் தெரியும் அதன் உண்மையும் தெரியும் காலத்துக்காக பொறுத்துக் கொண்டிருந்தேன். காலம்வரும் போது அங்கு நடந்தசிலவிடயங்களைத்தெரிவிப்பேன். – என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## முள்ளிவாய்க்கால் நினைவு தமிழகத்திலும் அனுஷ்டிப்பு

(ந.லோகதயாளன்)

முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நினைவேந்தலின் 13ஆம் ஆண்டு நிகழ்வு தமிழ்நாட்டின் தனுஷ்கோடி அடுத்த அரிச்சல்முனையில் தமிழர் கட்சி சார்பில் நினைவு கூறப்பட்டது.

இதன்போது தெர்மாகோல் மூலம் படகு செய்து அதனை கடலில் விட்டு மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

இலங்கையில் உள்நாட்டு போரின் போது ஈழத் தமிழர்களைக் கொத்து கொத்தாக முள்ளிவாய்க்காலில் கொன்று குவிக்கப்பட்டதை ஆண்டு தோறும் உலகத் தமிழர்கள் மற்றும் இலங்கையில் உள்ள ஈழத்தமிழர்கள் மே 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவு தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருவது வழக்கமாக உள்ளது.


இந்த நிலையில் இன்று மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தையொட்டி தமிழர் கட்சி சார்பில் அந்தக் கட்சியின் மாநில செயலாளர் தீரன் திருமுருகன் தலைமையில் குழந்தைகள் உட்பட ஏராளமானோர் தனுஷ்கோடி அடுத்த அரிச்சல்முனை பகுதியில் பிரபாகரன் மகன் பாலசந்திரனின் உருவப் படத்தை தெர்மாகோல் மூலம் உருவாக்கப்பட்ட படகில் வைத்து கடலில் விடப்பட்ட பின்னர் கடலில் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த ஈழத்தமிழர் நினைவாக கோஷங்கள் எழுப்பியதோடு, ராஜபக்ஷக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்பி தங்களுடைய கண்டனத்தைப் பதிவு செய்தனர்.

நிகழ்வின் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த தமிழர் கட்சியின் மாநில செயலாளர் தீரன் திருமுருகன் –

ஐ.நா. மன்றத்தில் இந்திய அரசு தலையிட்டு பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும், முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தை சென்னையிலுள்ள மெரினா கடற்கரையில் அமைக்க வேண்டும், மே 18 நினைவு தமிழின அழிப்பு நாளாக அறிவித்து தமிழக அரசு அந்த நிகழ்வை நடத்த வேண்டும், தமிழக முதல்வர் தமிழினத்தின் தலைவராகவும் தமிழகத்தின் முதல்வராக அவர் சொல்லிக்கொண்டு இருக்கிறார். முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் யாரெல்லாம் கலந்து கொள்ளமாட்டார் என்று நினைத்தவர்கள் எல்லாம் கலந்து கொண்டிருக்கிறார்கள். இதனைத் தமிழக அரசு வேடிக்கை பார்க்காமல் ஒரு துக்க நாளாக அறிவித்து அறிக்கை விட வேண்டும் எனத் தெரிவித்தார்.

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வவுனியாவில் நேற்று அனுஷ்டிப்பு



முள்ளி வாய்க்காலில் மரணித்த உறவுகளுக்கான, ஆத்ம சாந்தி பூசையும், நெய்தீபம் ஏற்றி வழிபடும் நிகழ்வும், நேற்று(புதன்கிழமை) காலை 08.30 மணிக்கு வவுனியா குருமன்காடு ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் செ. மயூரன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர். செ.சந்திரகுமார், அந்தணர் ஒன்றிய நிர்வாகத்தினர், ஆலய பரிபாலனசபையினர் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## முள்ளிவாய்க்காலில் மரணித்த உறவுகளுக்கு நீதி பெற்றுக்கொடுத்தாலே ஆத்மா சாந்தியுறும்!

### தமிழர் விடுதலைக் கூட்டணியின் மகளிர் பேரவை செயலாளர் தெரிவிப்பு

2009 மே 18 ஆயுதப்போராட்டம், முடிவுக்கு வந்தாக கூறப்படுகின்ற நிலையிலும், இன்று வரை போரால் கொல்லப்பட்ட இனத்துக்கு நீதியோ, அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமையோ இன்று வரை வழங்கப்படவில்லை. அவர்களின் ஆத்மா சாந்தி அடைய நாம் இத்தினத்தினை சுடர் ஏற்றி நினைவு கூர்ந்தாலும், அவர்களை கொடூரமான முறையில் கொன்று குவித்ததற்கு நீதியை நாம் அனைவரும் ஒன்றிணைந்து பெற்று கொடுத்தால் மட்டுமே அவர்களின் ஆத்மா நிரந்தரமாக அமைதி அடையும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் மகளிர் பேரவை செயலாளர் சூரியமூர்த்தி சூரியபிரதீபா வாசவன் தெரிவித்தார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், 2009 மே 18 என்பது தமிழ் இனத்தின் வரலாற்றில் மறக்க முடியாத, என்றுமே எமது மக்களின் மனங்களில் வேதனையை தருகின்ற வலி நிறைந்த நாளாகும்.

தொடர்ந்தும் இந்த நினைவேந்தலை நிகழ்த்துவதற்கு பல இன்னல்கள் நெருக்கடிகள் வந்தாலும், எமது மக்களாக, உறவுகளுக்காக நினைவேந்தும் உரிமையும், கடமையும், எம் இனத்தக்கு உண்டு. இத்தினத்தை யாரும் அரசியலுக்காகப் பயன்படுத்துவதை நாம் ஒருபோதும் ஏற்று கொள்ள முடியாது. இவர்களின் அழிவிற்கு அன்றைய தினத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்த அனைவரும் பொறுப்புக்கூற வேண்டும்.

வெறும் அஞ்சலி நிகழ்வுகளை செய்வதால் மட்டும் இறந்த அப்பாவி மக்களின் சாபத்தில் இருந்து யாரும் தப்பி விட முடியாது. இன்றைய நாட்டு அரசியல் நிலைமை இதனை நன்கு உணர்த்துகிறது. இப்படியான நிகழ்வுகளை சிறந்த முறையில் வலுவாக நடத்துவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளினதும் பங்களிப்பும் அவசியம் என்பதனையும் நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

இதே ஒரு மே 18 இல் தான் 2005 மே 18 இல் சில இதயமற்ற சில இனத் துரோகிகளால் எனது தந்தை அமரர் சூரியமூர்த்தியும் சன்னம் சுட்டு வீழ்த்தப்பட்டார். ஏழாம் நாள் மரணம் அவரை தழுவிக்கொண்டது. இது மன்னிக்க முடியாதது. இவ்வாறான உயிர்களை பலி கொண்டவர்கள் நிச்சயம் ஒருநாள் நீதி தேவதையின் முன் பதில் கூறியாக வேண்டும். – என்றார்.

## நீதியும் பொறுப்புக்கூறலும் இன்றும் மறுக்கப்படுகின்றன!

### சாணக்கியன் டுவிட்டர் பதிவு



நீதியும் பொறுப்புக்கூறலும் இன்னும் மறுக்கப்படுகின்றன என நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை முன்னிட்டு டுவிட்டரில் நேற்று (புதன் கிழமை) வெளியிட்டுள்ள பதிவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தப் பதிவில் மேலும் தெரிவித்துள்ள அவர் –

13 ஆண்டுகளுக்கு முன்பு இதே நாளில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த உயிர்களையும், பாதிக்கப்பட்ட குடும்பங்களையும் நினைவு கூர்கிறோம்.

நீதியும் பொறுப்புக்கூறலும் இன்னும் மறுக்கப்படுகின்றன. பொறுப்பாளர்கள் இன்னும் சுதந்திரமாகத் திரிகிறார்கள். எதிர்காலத்தில் மீண்டும் இவ்வாறு நடக்காமல் இருக்க நீதியை உறுதி செய்ய வேண்டும்' என பதிவிட்டுள்ளார்.

# தமது விடுதலைக்காகப் பேரறிவாளன் கடந்து வந்த சட்டப் போராட்டங்கள்!



பேரறிவாளன் விடுதலை தொடர்பான வழக்கு சுப்ரீம்கோர்ட் நீதிபதி நாகேஸ்வர ராவ் தலைமையிலான அமர்வு முன் விசாரணை நடைபெற்று வந்தது. இந்த வழ்க்கில் சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் எல்.நாகேஸ்வர ராவ், போபண்ணா மற்றும் பி.ஆர். கவாய் ஆகியோர் நேற்று தீர்ப்பு வழுங்கினர். 30 ஆண்டுகளுக்கு மேலாக சிறைவாசம் அனுபவித்த நிலையில் பேரறிவாளனை விடுவித்து சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் உத்தரவிட்டு உள்ளனர்.

சுப்ரீம் கோர்ட் தனக்கு உள்ள அதிகாரத்தை பயன்படுத்தி, வழுக்கில் 142 ஆவது பிரிவைச் செயல்படுத்தி, விடுதலை செய்துள்ளது. இந்திய வரலாற்றில் சுப்ரீம் கோர்ட் இது போன்ற தீர்ப்பை வழுங்குவது மிகவும் அரிதாகும். நீதிபதிகள் வழுங்கிய தீர்ப்பில், பேரறிவாளன் வழுக்கில் கவர்னர் செய்த கால தாமதம் நீதிமன்ற பரிசீலனைக்கு உட்பட்டது. அவரின் விடுதலை மீது கவர்னர் முடிவு எடுக்காமல் காலம் தாழ்த்தியமை, 28 மாதங்கள் இதில் முடிவு எடுக்காமல் இருந்தமை தவறு, அவர் காலதாமதம் செய்தது தவறு, இதனால் அவரை (பேறறிவாளனை) விடுதலை செய்கிறோம் என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழுங்கி உள்ளது.

பேரறிவாளன் விடுதலை இந்த தீர்ப்பு எப்பொழுதோ கிடைத்திருக்க வேண்டும், இது கால தாமதம்தான் ஆனால் மகிழ்ச்சி என பேரறிவாளன் தாயார் அற்புதம்மாள் கூறி உள்ளார்.

கடந்த 1991 ஆம் ஆண்டு மே 21 ஆம் திகதி ஸ்ரீபெரும்புதூரில் தேர்தல் பிரச்சாரத்திற்காக வந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி மனித வெடிகுண்டு மூலம் கொல்லப்பட்டார்.

இந்த வழுக்கில் 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11 ஆம் திகதி பேரறிவாளன் கைது செய்யப்பட்டார். இந்தப்படுகொலை தொடர்பாக விசாரணை மேற்கொண்ட சிறப்பு நீதிமன்றம், நளினி, முருகன், பேரறிவாளன் உள்ளிட்ட 26 பேருக்கும் 1998 ஆம் ஆண்டு ஜனவரி 28 ஆம் திகதி தூக்குத்தண்டனை வழுங்கி தீர்ப்பளித்தது.



சிறப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து 1999 ஆம் ஆண்டு மே 11 ஆம் திகதி மேன்முறையீடு செய்யப்பட்ட வழுக்கில், சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி ஆகிய 4 பேருக்கு மட்டும் தூக்கு தண்டனையை சுப்ரீம் கோர்ட்டு உறுதி செய்தது.

தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்க வேண்டுமெனக் கோரி 4 பேரும் தாக்கல் செய்த மறு ஆய்வு மனு 1999ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் சுப்ரீம் கோர்ட்டில் தள்ளுபடி செய்யப்பட்டது.

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 4 பேரின் கருணை மனுக்களை கவர்னர் பாத்திமா பீவி 1999 ஆம் ஆண்டு தள்ளுபடி செய்தார். கவர்னரின் உத்தரவை ரத்து செய்த சுப்ரீம் கோர்ட், அமைச்சரவை முடிவின் மீதே கவர்னர் முடிவெடுக்க வேண்டும் எனக் கருத்து தெரிவித்தது.

இதனையடுத்து கடந்த 2000 ஆம் ஆண்டு முதலமைச்சர் கருணாநிதி தலைமையிலான தமிழ்நாடு அரசு வெளியிட்ட அரசாணையின் மூலம் நளினியின் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

தொடர்ந்து பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூவரும் ஜனாதிபதிக்கு கருணை மனுக்களை அனுப்பினர். 2000 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரை அப்போதைய ஜனாதிபதி கே.ஆர். நாராயணன், ஏ.பி.ஜே. அப்துல் கலாம் ஆகியோர் கருணை மனுக்களை நிலுவையில் வைத்தனர். இதன்பின்னர் பதவியேற்ற ஜனாதிபதி பிரதீபா பாட்டில், 2011 ஆம் ஆண்டு இவர்களின் கருணை மனுக்களை தள்ளுபடி செய்கிறேன் என அறிவித்தார்.

11 ஆண்டுகளுக்கு மேலாக கருணை மனுக்கள் நிலுவையில் வைக்கப்பட்டதற்கு எதிராக தொடர்ந்த வழுக்கை விசாரித்தசென்னைஐகோர்ட்டு மூவரையும் தூக்கிலிட தடை விதித்தது. பிறகு இந்த வழுக்குசுப்ரீம் கோர்ட்டுக்கு மாற்றப்பட்டது. 2014 பெப்ரவரி 18 ஆம் திகதி சுப்ரீம் கோர்ட்டில் சதாசிவம் தலைமையிலான மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வு மரண தண்டனையை ரத்து செய்து தீர்ப்பளித்தது.

தொடர்ந்து தமிழ்நாடு அமைச்சரவை எடுத்த தீர்மானத்தின்படி எழுவரும் விடுவிக்கப்படுவதாக அப்போதைய முதலமைச்சர் ஜெயலலிதா அதிரடி அறிவிப்பை வெளியிட்டார். தமிழ்நாடு அரசின் முடிவை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டை அணுகி மத்திய அரசு தடையாணை பெற்றது.

இந்த வழுக்கு மத்திய மாநில அரசின் அதிகாரம் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் வருவதால், வழுக்கு, 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றப்பட்டது. இதனையடுத்து இப்ராஹிம் கலிபுல்லா தலைமையிலான 5 பேர் அடங்கிய அமர்வு, எழுவரையும் 161 ஆவது பிரிவின் கீழ் விடுதலை செய்தால் மத்திய அரசின் ஒப்புதல் தேவையில்லையென அறிவித்தது.

இதன் பின்னர் 7 பேரையும் விடுவிக்க அனுமதி கோரி, மத்திய அரசுக்கு தமிழ்நாடு அரசு கடிதம் அனுப்பியது. இதனிடையே சுப்ரீம் கோர்ட்டில் இந்த வழுக்கை விசாரித்த ரஞ்சன் கோகாய் தலைமையிலான மூவர் அமர்வு 7 பேரை விடுவிப்பது தொடர்பாக 161 ஆவது பிரிவின் கீழ் கவர்னர் முடிவெடுக்க வேண்டுமென தீர்ப்பளித்தது. இதன் தொடர்ச்சியாக 7 பேரையும் விடுதலை செய்யக்கோரி தமிழ்நாடு அரசு பரிந்துரை செய்தது.

இந்நிலையில் சிறுநீரக தொற்று உள்ளிட்ட உடல்நலக் குறைவால், பரோலில் வந்த பேரறிவாளன், தொடர் சிகிச்சை பெற வேண்டி, 10 ஆவது முறையாக பரோல் நீடிக்கப்பட்டது. மார்ச் 9ஆம் திகதி பேரறிவாளனுக்கு ஜாமீன்(பிணை) வழுங்கி சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பளித்தது. அதனைத் தொடர்ந்து, தற்போது தமிழ்நாடு அரசு எழுத்துப்பூர்வ வாதத்தை சுப்ரீம் கோர்ட்டில் நேற்று தாக்கல் செய்தது. அதில், பேரறிவாளனை விடுதலை செய்வதற்கான உரிய உத்தரவை பிறப்பிக்க வேண்டும் என்றும், விசாரணை வரம்பு தமிழ்நாடு எல்லையில் உள்ளதால் முடிவெடுக்க வேண்டிய அதிகாரமும் மாநில அரசுக்கே உள்ளது எனவும் வாதம் முன்வைக்கப்பட்டது.

மேலும், கவர்னரின் சிறப்பு அதிகாரமான 161 இன் கீழ் முடிவெடுக்க எந்த தடையும் இல்லை எனவும் தமிழ்நாடு அரசு குறிப்பிட்டிருந்தது. இந்நிலையில், நீதிபதி நாகேஸ்வர ராவ் தலைமையிலான அமர்வு பேரறிவாளனை விடுதலை செய்து உத்தரவிட்டுள்ளது.

பேரறிவாளன் விடுதலை என்ற தீர்ப்பு குறித்த தகவல் அறிந்தது, பேரறிவாளன், அவரது தாய் அற்புதம்மாள் ஆகியோர் 31 ஆண்டு கால வேதனையின் தழும்புகளை ஆனந்த கண்ணீர் மூலம் வெளிப்படுத்தினர்.

அறையில், இருந்த பேரறிவாளனின் உறவினர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் தமிழ் அமைப்பினரும் அவரோடு இணைந்து தங்களின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வகையில் ஆனந்த கண்ணீர் சிந்தினர். பேரறிவாளனை கட்டி அணைத்தபடி உறவினர் ஒருவர் பேரறிவாளன் மார்பில் சாய்ந்து தனது மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டது பார்ப்பவர்களை நெகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# புலம்பெயர் மக்களின் எதிரொலியும் தாக்கமும்



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம் -15

**சர்வதேச நாடுகளின் அனுகுமுறை**

ரணிலை பிரதமராக்கியதில் இந்தியாவிற்கு எதுவித பங்கும் இல்லை என அதன் தூதுவர் மறுப்பு தெரிவித்து இருந்



தாலும், முதன்முதலாகவும் உடனடியாகவும், வாழ்த்தும் வரவேற்பும் பொருளாதார மீட்புக்கான நிதி உதவியும் இந்தியாவிடமிருந்துதான் இலங்கைக்கு வந்தது.

அதேபோலவே அமெரிக்காவின் தூதுவர், பின்னர் ஜப்பான், பிரித்தானியா, ஜேர்மனி போன்ற மேலைத்தேய நாடுகளிடம் இருந்து வாழ்த்துக்களும் உதவிகளும் தெரியப்படுத்தப்பட்டன.

அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு இருந்த சிக்கல்களிலிருந்து ஓர் அரசு அமைவதற்கான சாத்தியக்கூறுகளுக்காகவும் அதிலிருந்து ஸ்திரத்தன்மை உருவாகும் என்ற சர்வதேசத்தின் நம்பிக்கையிலிருந்தும் இந்த வாழ்த்துக்களும் உதவிகளும் கிட்டின.

அவ்வளவு நாட்டின் பிரதிநிதிகள் யாவரும் நேரடியாகக் காலிமுகத்திடல் போராட்டத்தையும் அப்போராட்டக்காரர்களின் கோரிக்கைகளையும் அறிந்தவர்கள். முற்றாக இடதுசாரிக் கொள்கைகளை முன்னெடுக்கும் அரசு ஸ்ரீலங்காவில் அமைந்து விடக் கூடாது என்பதிலும், வலதுசாரி மேலைத்தேய சார்பான அரசியல்வாதிகள் பொறுப்பில் இருக்க வேண்டும் என்பதிலும் அவர்களது கவனமும் தார்மீக சிந்தனையும் இருந்தன.

கோட்டாபய பதவி விலகவில்லை, நாட்டின் அரசியல் கட்டமைப்பு மாறவில்லை, ஆனால் பழையவை எல்லாம் ஒரு புதிய தலைமையில் உருவாக்கப்பட்டு விட்டன.

பொருளாதார நெருக்கடியில் இருந்து ஸ்ரீலங்காவை மீட்டு எடுப்பதுதான் முக்கியம். அது எல்லா மக்களுக்கும் பொதுவான நெருக்கடி. நாடு இன்னுமொரு சோமாலியாவாக – செயலைதிகாரமற்றதாக – மாறி விடக் கூடாது என்பது அமெரிக்காவின் ஆதங்கம்.

ரணிலின் அரசு வந்தாயிற்று. அதன் ஆக்கங்களை, பெறுபேறுகளை உறுப்பினர் சுமந்திரன் நாடாளுமன்றத்தில் நாக்கு பிடுங்குவது போல ரணிலிடம் கேட்டுமாயிற்று. ஒரு நேர்மை இல்லாத, நாணயமற்ற, வெட்கக்கேடான மனிதர் எனத் தனது நல்லாட்சிக்கால நண்பர் ரணில் பிரதமராகியதும் – கோட்டாவுக்கு எதிரான வாக்களிப்பை திசைதிருப்பியமை தொடர்பில் – விமர்சித்திருக்கிறார் சுமந்திரன்.

ரணில் அவை பற்றிக் கவலைப்படவில்லை. இப்படியான கருத்துக்கள் சரியற்றவை என மறுக்கவும் இல்லை. தான் தெரிவித்த வழியையும் அறிவுரையையும் சுமந்திரனோ எதிர்க்கட்சியோ பயன்படுத்தவில்லை என விளக்கம் தருகிறார்.

பொருளாதாரம்தான் எல்லோருக்கும் முக்கியமான விடயம் என்ற சர்வதேச அனுகுமுறையை காட்டுகிறார். ஆனால் தமது நாணயம் பற்றிக் கவலைப்படவே இல்லை.

அவரைப் பற்றி சுமந்திரனது பேச்சுகள் இவற்றை வெளிப்படுத்த அந்த நாணயமற்ற மனிதரோடு இனப்பிரச்சினை தீர்வு பற்றிப் பேச கூட்டமைப்பின் சம்பந்தன் தனது தீர்வுக் கட்டுகளோடு புறப்படுகிறார். ரணிலை சுற்றியுள்ள பேரினவாதக் குழுவைப் புரிந்துகொள்ளாமல், ரணில் முக்கியமானது எனக் கருதும் பொருளாதார முயற்சியில் குறுக்கிடுவது போல – சர்வதேசத்தின் நாடிகளையும் பிடித்துப் பார்க்காமல் – இதனை முன்னெடுக்க முயல்கிறார் சம்பந்தன். கேட்டால் ரணில்தானே இப்பொழுது அதிகாரத்தில் இருக்கிறார், அவரோடுதானே பேச வேண்டும் என்பார். எங்கு, எவரோடு பேச வேண்டும் என்பதையும், இந்தத் தருணத்தில் எது சாணக்கியம் என்பதையும் கூட்டமைப்பும் புரிந்து செயல்பட வேண்டும். எந்த விதமான தீர்வு பற்றி சம்பந்தன் பேச விழைகிறார்? அதைப் பேசி செயல்படுத்தக் கூடிய நாணயமோ, ஆதரவோ, பலமோ, திராணியோ ரணிலுக்கு உண்டா? இந்த நாடாளுமன்றத்தின் மூலம் அது கிடைக்க சாத்தியம் உண்டா? – எம்பவற்றையெல்லாம் சிந்திக்க வேண்டும்.



சர்வதேசத்தில் அனுகுமுறையை நோக்க, பிரித்தானிய நாடாளுமன்றத்தில் ஸ்ரீலங்காவைப் பற்றிய விவாதம் நடந்த பொழுது தரப்பட்ட கருத்துக்கள் தெளிவுபடுத்தும்.

பொருளாதார சரிவில் இருந்து நாட்டை பாதுகாப்பதும் மற்றும் அதனை இன்று இருக்கும் நிலையிலிருந்து மீட்டெடுப்பதும் முக்கியம் என பிரித்தானிய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக கூறப்பட்டது. அதில் இனப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு அவசியம் என்றோ, அதனை முடிக்காமல் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க முடியாது என்றோ கருதப்படுவதாக கருத்துக்களவையும் வரவேயில்லை.

நாட்டில் நடப்பவற்றை பிரித்தானிய அரசாங்கம் உன்னிப்பாக கவனித்து வருகிறது. ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாகப் பொருளாதார நெருக்கடிதான் மிக முக்கியமானது, அதனைத் தீர்ப்பதற்கு பிரித்தானிய அரசு தரக்கூடிய எல்லாத் தரவுகளையும் தர முன் நிற்கும் என்பதுதான் அங்கு பேசப்பட்டவற்றின் சாரம். அதற்காக உலக வங்கி, சர்வதேச நாணய சபை போன்றவற்றுக்கு பிரித்தானியா பரிந்துரைகள் தரும் என்றும் கூறப்பட்டது.

பிரபு அகமது, தான் அண்மையில் கூட ஸ்ரீலங்காவுக்கு விஜயம் செய்து பல மக்கள் குழுமங்களின் கருத்துக்களையும் கற்றறிந்தார் எனவும், அங்குள்ள காலங்காலமான அரசியல், இனப் பிரச்சினை போன்றவை மறைக்கப்படவில்லை, அவற்றை ஒட்டி சர்வதேச மனித உரிமை மன்றத்தில் தங்களது பங்கை ஆர்வத்துடன் தருவார்கள் எனக் கூறுகிறார்.

ஆகவே பிரித்தானியா அமெரிக்கா போன்ற நாடுகளின் பார்வையில் கூட இனப்பிரச்சினையும் தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களும் தீர்வுகள் காணப்பட வேண்டிய விடயங்களாக இருந்தாலும், பொருளாதார வீழ்ச்சியினால் நாடு தங்களது வட்டங்களில் இருந்து வெளியேறி, இடதுசாரிகைகளில் போய்விடக்கூடாது என்ற கரிசனை உண்டு என்பது தெரிகிறது.

பெருநோய், சிறு நோய்க்குக் கழுதைக்குக் கிடைத்த மருந்துதான் தரும் நாணயமற்ற, மனிதாபிமானமற்ற அனுகுமுறையா?

ரணிலைப் போல அந்த சமுதாயத்து அங்கங்களும் தங்கள் தங்கள் சுய நலனைப் பார்ப்பவைதான். ஆனாலும் பல டீல்களை வைத்து, தனது பிம்பங்களால் ரணில் ஆதரவுகளைத் தேடிக்கொண்டு, தன்னால் பொருளாதாரத்தை மீட்டு, எல்லோருக்கும் சோறு தருவேன் என்று உறுதி அளிக்கிறார். ஆதலால் கொத்தி, காறித் துப்பாமல் தமிழ் மக்களது அனுகுமுறையையும் ஆடிஆடி பாலை கறப்பதாக இருக்க வேண்டும்.

நாம் நேர்மையானவர்கள் என்பதில் பெருமை கொள்ள வேண்டும். ஆனால் இன்னும் ஒருவர் நேர்மை இல்லாதவர் என திருப்பிக் கிளப்புவது நன்மை தராது போகலாம்.

அரசியல்வாதிகள், அதிகாரத்தில் இருப்பவர்கள் அனேகமாக ஊடகவியலாளர்களிடம் ஓரளவு அந்நியோன்னியத்துடன் இருப்பார்கள். மற்ற அரசியல் தலைவர்கள், நடப்புகள், அவர்களது அபிப்பிராயங்கள் பற்றி அத்தகைய ஊடகவியலாளர்களிடம் மனம் திறந்து பேசுவது வழமை. நாடாளுமன்ற தொடர்புகளை ஆழமாக அவதானித்து வந்த பத்திரிகையாளர் சபாரத்தினம், சிவகுருநாதன், சிவநாயகம், சிவப்பிரகாசம், சிவநேசச்செல்வர் உடன் பழகும் வாய்ப்புகள் இருந்த தருணங்களில் அவர்கள் அவற்றைப் பகிர்ந்து கொள்வது உண்டு.


தமிழ்த் தலைவர்கள் காலங்காலமாக ஜனநாயகப் பண்புகளை நாடாளுமன்றத்திலும் வெளியிலும் பாதுகாத்தவர்கள் எனவும், அதில் விடிவெள்ளிகளாகத் தந்தை செல்வநாயகம், வன்னியசிங்கம், தர்மலிங்கம், கதிரவேற்பிள்ளை, அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் போன்றவர்களின் பெயர் மிக மிக மரியாதையுடன் பகிரப்படும் எனவும் கூறப்படுவதுண்டு.



தந்தை செல்வா மறைந்த பொழுது சிங்களத் தலைவர்கள் யாவருமே அவரது மரணச் சடங்கிற்கு வந்தனர்.

அமிர்தலிங்கத்துக்கு நாடாளுமன்றத்திலும் வெளியேயும் ஸ்ரீமாவோ தந்த இன்னல்கள் பல. சிறை வைப்பு அவரை வெளிநாடுகள் செல்ல விடாது தடுத்தமை... இப்படிப் பல.

ஆனால் தனது ஜனாதிபதி பதவிக்குக் குறுக்காக நிற்பார் என்று கருதி ஸ்ரீமாவோவின் குடியுரிமையைப் பறிக்க ஜே.ஆர்.ஜெயவர்த்தனா முயன்றபோது அதனைத் துணிவாக – மிரட்டல்களையும் கணக்கில் எடுக்காது – எதிர்க்க முன் நின்றவர் அமிர்தலிங்கம். அவர் கொல்லப்பட்டபோது ஸ்ரீமாவோ அழுதார்.



ஆக, தமிழ் மக்கள் பெருமைப்படக் கூடியவர்களாக, நாணயம் மிக்கவர்களாகத் தலைவர்களைக் கொண்டிருந்தும், கடைசியில் தங்களுக்கு என்று இதுவரை அரசியலில் பெற்றுக் கொண்டது என்ன? அதற்காக நாணயமற்ற வழிகள்தான் தேவை என்றில்லை.

ஆனால் எப்படியோ அவை ராஜபக்ஷக்களை, ரணிலை, அதிகாரத்தில் – பதவியில் – வைத்திருக்கின்றன.

எனவே, வெற்றி அடைந்து கொள்ள வேண்டியவை வருகின்ற சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

(வளரும்)